பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள்:-பன்னிரண்டு

*Registered as a News paper in Sri Lanka*

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா. 7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஆடி 15 | வெள்ளிக்கிழமை | (30.07.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 224

ராம்கோ சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## ஜே.வி.பிக்கு அஞ்சவேண்டாம்

# ஜனாதிபதி புலிகளுடன் பேச்சை ஆரம்பித்தால்

# அரசுக்கு ஐ.தே.கட்சி முழு ஆதரவு வழங்கும்!

## முன்னாள் அமைச்சர் ராஜித உறுதி

(நமது நிருபர்)

**தமிழீழ விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்ட தன்னாட்சி அதிகாரம் உடைய இடைக்கால நிர்வாக சபையின் யோசனையின் அடிப்படையில், விடுதலைப் புலிகளுடன் ஜனாதிபதி சந்திரிகா உடனடியாக பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பாரானால், அதற்கான முழு ஆதரவையும் வழங்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாராக இருப்பதாக முன்னாள் காணி அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் உள்ள எதிர்க் கட்சித் தலைமையலுவலகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே ராஜித சேனாரட்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் யோசனையின் அடிப்படையில் ஜனாதிபதி பேச்சுக்களை ஆரம்பித்தால் அரசைக் கவிழ்ப்பதற்கு ஜே.வி.பி தயங்காது என்று ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச கூறியமை அரசுக்கு பெரிய சவாலாக அமைந்துள்ளது. இதற்காக ஜனாதிபதி அஞ்சத்தேவையில்லை.

விமல் வீரவன்சவின் அந்தக்

(12ம் பக்கம் பார்க்க)

### இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு

## மேலும் 51 மில்லியன் டொலரை உலக வங்கி வழங்குகிறது

(கொழும்பு)

சமூக அபிவிருத்தி மற்றும் பொருளாதார மேம்பாடு என்பவற்றை அடைந்துகொள்ளும் பொருட்டு மேலும் 51 மில்லியன் அமெரிக்க டொலரை உலக வங்கி இலங்கைக்கு வழங்கவுள்ளது.

இதற்கான மூன்றாவது ஒப்பந்தம் நேற்றுமுன்தினம் நிதியமைச்சின் செயலகத்தில் வைத்துக் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இதில் இலங்கை அரசின் சார்பில் நிதியமைச்சின் செயலாளர் பி.பி. ஜெயசுந்தரவும் உலக வங்கியின் சார்பில் அதன் இலங்கைக்கான பணிப்பாளர் பீற்றர் கரோலும் கைச்சாத்திட்டனர்.

இதேவேளை உலக வங்கியின் நிதியுதவி குறித்து இரு தரப்பினாலும் ஏற்கனவே ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-04)

## மாவீரர்களின் தியாகமே பலம்பொருந்திய படையணி

(மட்டக்களப்பு)

எமது மாவீரர்களின் தியாகத்தினாலேயே நாம் பலம் பொருந்திய படையணியாக விளங்குகின்றோம் என மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் தெரிவித்துள்ளார்

நேற்று மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலையில் நடைபெற்ற கப்டன் அன்பரசியின் ஒன்பதாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு உரை நிகழ்த்துகையில், மாவீரர்களின் அர்ப்பணிப்பும் தாயக விடுதலை உணர்வுமே நாளைய தாயக விடுதலைக்கு வழிசமைக்கும் என்றும் மேலும் தெரிவித்தார். நிகழ்வில்

(12ம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவில் கடற்படை முகாம் மக்கள் ஒன்றியம் எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நெடுந்தீவில் ஸ்ரீலங்காக் கடற்படையினர் புதிதாக முகாம் அமைப்பதை எதிர்த்து மக்கள் ஒன்றியம் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் மனு ஒன்றை கையளித்துள்ளது.

நெடுந்தீவில் ஏற்கனவே போர் நிறுத்த காலத்தில் புதிதாக ஸ்ரீலங்காக் கடற்படையினர் மக்கள் எதிர்ப்புக்கு மத்தியில் முகாம் அமைத்து நிலை கொண்டுள்ளனர். போர்க் காலத்தில் இங்கு கடற்படையி

(12ம் பக்கம் பார்க்க)

## கோதுமை மா இறக்குமதி வரியை

## மாவீரர்களின் நினைவுநாள் நிகழ்வும் சோதியா படையணியின் 7 ஆம் ஆண்டு நிறைவும்

# கோதுமை மா இறக்குமதி வரியை நீக்க அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

கோதுமை மாவிற்கு இதுவரை காலமும் விதிக்கப்பட்டிருந்த 25 வீத இறக்குமதி வரி நீக்கப்பட்டுள்ளதாகவும், இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருப்பதாகவும் வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெய்ராஜ் பெர்ணான்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

கோதுமை மா இறக்குமதியில் இதுவரை காலமும் ஏகபோக உரிமையை வகித்த பிறிமா நிறுவனம் மாத்திரமன்றி இனிமேல் தனியார் துறையினரும், எவ்வித தடையும் இன்றி கோதுமை மாவினை இறக்குமதி செய்யமுடியும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

1978 ஆம் ஆண்டுக்குப் பின் (26 வருடங்களுக்கு) கோதுமை மாவிற்கான இறக்குமதி வரி நீக்கப்பட்டிருப்பதுடன் கோதுமை மாவினை எவரும் இறக்குமதி செய்யலாம் என்று தெரிவித்துள்ளார்.

(ம)

**உள்ளே...**

**அரச துறைகளில் வேலை வாய்ப்பு வழங்குவதற்காக நடைபெற்ற நேர்முகத் தேர்வில், தெரிவான பட்டதாரிகளின் பெயர்கள் உள்ளே...**

# சோதியா படையணியின் 7 ஆம் ஆண்டு நிறைவும்

(நமது நிருபர்)

மணலாறு கொக்குத்தொடுவாய் ஸ்ரீலங்காகப் படைமுகாம் மீதான தாக்குதல் நடவடிக்கையின் போது வீரச்சாவடைந்த 57 சிறுத்தைப் படையணி மாவீரர்களின் 9ஆம் ஆண்டு நினைவு நாளும், சோதியா படையணியின் 7ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வும் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளன.

நேற்றுப் முன்தினம் பிற்பகல் ஆறு மணிக்கு ஆரம்பமான இந் நிகழ்வில் பொதுச்சுடரினை போராளி தமிழ்க்கவியும், தமிழீழத் தேசியக் கொடியினை தளபதி கேணல் ஜெயமும், ஈகச்சுடரினை பிள்ளையார் மாஸ்டரும் ஏற்றினர்.

1995 ஆம் ஆண்டு ஏழாம் மாதம் 28ஆம் நாள் கொக்குத்தொடுவாய் ஸ்ரீலங்காப் படை படைமுகாம் மீதான தாக்குதல் நடவடிக்கையின்போது வீரச்சாவடைந்த சிறுத்தைப்படையணியின் லெப்.கேணல் கோமளாவின் திருவுருவப்படத்திற்கான மலர் மாலையினை அவரது தாயார் அணிவித்தார்.

சிறுத்தைப் படையணியின் முதல் மாவீரர் லெப். ஆதிரையின் திருவுருவப்படத்திற்கு போராளி கெங்கா மலர் மாலை அணிவித்தார்.

தொடர்ந்து தற்காப்புக்கலை ஆசிரியர் சோதி மற்றும் போராளிகள் வழங்கிய நினைவுக் கவிதைகள்,

பேபி ஆசிரியையின் நெறியாள்கையில் உருவான நடன நிகழ்வுகள், போராளி சாம்பவி தணிகைமாறனின் நெறியாள்கையில் உருவான விழ விழ

(12ம் பக்கம் பார்க்க)

# சமாதானப் பேச்சு தாமதமானால் அது யுத்தத்தை துரிதப்படுத்தும்

## ஜீ.எல்.பீரிஸ் எச்சரிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான முன்னெடுப்புக்கள் தாமதமாகும் ஒவ்வொரு கணமும் யுத்தத்திற்கான வாய்ப்புக்கள் துரிதப்படுத்தப்படுமென ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஜீ.எல்.பீரிஸ் எச்சரிக்கை தெரிவித்துள்ளார்.

இவர் நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாக சபை குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தாம் தயாராக இருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறுகிறார். எனினும் அமைச்சரான ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே இடைக்கால நிர்வாகத்தை மையமாகக் கொண்ட பேச்சுவார்த்தையை தாம் எதிர்ப்பதாக தெரிவித்தார்.

இது சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டவர்களின் ஆதிக்கத்தை வெளிப்படுத்துகிறது. ஜே.வி.பி தொடர்ந்தும் இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக கடைப்பிடித்து வந்த கொள்கை

(12ம் பக்கம் பார்க்க)

**அன்பு மாணவர்களே!**

**உள்ளே!**

க.பொ.த (சா/த) பரீட்சை மாதிரி வினாத்தாள்

தமிழ் மொழியும் இலக்கியமும் - 11

ஆக்கம்:

திருமதி.த.சுவாமிநாதன் ஆசிரியர்

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# அரச துறையில் வேலைவாய்ப்பு யாழில் தெரிவான பட்டதாரிகள்

**வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரச துறைகளில் வேலை வாய்ப்புக்கள் வழங்குவதற்காக நடாத்தப்பட்ட நேர்முகத் தேர்வில் யாழ். மாவட்டத்திலிருந்து தோற்றித் தெரிவானோரின் பெயர்கள் வெளியாகியுள்ளன.**

**யாழ்ப்பாணம், நல்லூர், ஊர்காவற்துறை, நெடுந்தீவு, மருதங்கேணி, பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்டோரின் பெயர்கள் இதுவரை வெளியாகவில்லை.**

**ஏனைய பிரதேச செயலகங்களில் இருந்து:- வேலணை 1, சாவகச்சேரி 1, பருத்தித்துறை 41, கரவெட்டி 76, கோப்பாய் 20, தெல்லிப்பழை 116, உடுவில் 153, சண்டிலிப்பாய் 48, சங்கானை 39, காரைநகர் 37 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.**

## கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு

கே.குகனேசன், ஆர்.நிர்மலா, எஸ்.ஜகன், பி.கஜலக்ஷ்மி, பி.சதாசிவசர்மா, ஆர்.வானதி, கே.கிரிதரன், இ.பத்மா, வி.சுகந்தி, பி.மாலினி, எம்.செந்தில்குமார, எஸ்.தஜீதரன், ஏ.மாலினி, கே.தர்மினி, எம்.சிவகுமாரன், ரி.ஞானசசி, என்.கல்யாணி, எஸ்.விஜிதா, ரி.ரஜிதா, என்.ரவிக்குமார்.

## தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவு

ஆர்.ரட்ணேஸ்வரி, என்.சத்தியரூபன், கே.அகிலன், ரி.ஜெயமாலா, எஸ்.நடேசன், ஐ.ஆர்.டி.ராஜன், டி.வி.ஜே.இதயராஜ், வி.ஜெயசங்கர், ஜி.எம்.றெஜினா, பி.சர்மிலா, ஜே.கலையரசி, என்.பாலகௌரி, எஸ்.ஜெயகலா, பி.நர்மதா, எஸ்.பாமினி, ஜே.ஜெயராஜவாமிலா, வி.ரவிச்சந்திரன், பி.நடராசா, எஸ்.ரதினா, பி.அருளானந்தம், ரி.துஸ்யந்தி, எஸ்.சத்சணாமூர்த்தி, எஸ்.பூம்புகனேஸ்வரி, ஜே.செல்லத்துரை,

கே.சுபாகரன், கே.தர்மபாலன், கே.சசிகலா, ஐ.சித்ரா, வி.கல்யாணி, ரி.உமாதேவி, ரி.நிசாந்தி, ரி.தட்சாயினி, ஆர்.சுதாயினி, ரி.கவிதா, கே.சிவகரி, என்.உமா, கே.மகேஸ்வரன், ரி.ஜீவகுமார், ரி.கலைச்செல்வி, கே.ஜீவமலர், எம்.சிவகுமார், கே.மாசிலன், ரி.மங்களேஸ்வரன், வி.தயாநிதி, ஜி.அனுசா, கே.மணிவண்ணன், எஸ்.சத்தியசீலன், எஸ்.சிவரஞ்சிதன், வி.கயல்விழி, கே.பபிதா, யூ.சுதாகினி, வி.விஜயரட்சகன், ரி.சுரேந்தி, பி.அனிதா, ஆர்.லோகேஸ்வரி,

கே.மைதிலி, ஆர்.சர்வேஸ்வரி, எஸ்.செந்தூர்வாசன், ரி.சிறீஸ்கந்தராசா, கே.தர்சினி, ஜே.ஆன்லுமினா, எஸ்.ரங்கதரன், வி.பிரபாகரன், கே.சுசிலா, ரி.திருச்செந்தூரன், கே.சசிகரன், வி.கருணாவதி, என்.விஜிதா, என்.நிரஞ்சலா, எஸ்.சத்தியநாராயணன், பி.சுபந்தினி, பி.மோகனதாஸ், பி.மரியதாஸ், ஜி.சற்குணராஜா, என்.முகுந்தன், கே.அமுதன், வி.முரளிதரன், வி.வசந்தகுமார்,

பி.பாலமுரளி, எஸ்.சுவீந்திரன், பி.மகிந்தன், எஸ்.சுதர்சினி, எஸ்.சிறிதரன், எஸ்.சிபாஸ்கரன், எஸ்.நமோநாதன், ரி.கஜாலினி, வி.சிவகௌரி, ரி.மிதுனா, ஜே.சுஜித்தன், கே.மலர்ச்செல்வி, எஸ்.விக்ரர், எஸ்.பாமின், எஸ்.வனிதகுமாரி, ஏ.றெஜினோல்ட்ராஜ், எஸ்.கிரிஜா, என்.சிறிசங்கர், பி.பிரபாசினி, என்.ஜெகன், எஸ்.நந்தினி, பி.நகுலன், ஜே.இராசையா, வி.வேல்முருகன், கே.ஜசீதரன், ரி.ஜெயகுமாரி, பி.செயோன், பி.உருத்திராதேவி, எஸ்.ஆனந்தசெல்வராணி, எஸ்.லோகநாதன், எல்.இலங்கராணி, பி.அகிலகலா, ரி.உமா, யு.தாரணி, கே.தாட்சாயினி, கே.செல்வலக்ஸ்மி, ஏ.ஜெயவாணி, சி.ரத்ரி,

## உடுவில் பிரதேச செயலகம்

எம்.ரவிபாலன், பி.வனிதா, கே.சுமணலி, பி.பிரபாலினி, கே.பாமா, கே.கேதீஸ்வரன், ரி.நளினி, பி.கவிதா, எஸ்.தர்சினி, ஆர்.விஜயகீதா, வை.தர்சா, எஸ்.ஜெகஜீவன், பி.ஜஸ்ரின்யூட், ரி.கிரிசாநந்தன், வி.பாலமுருகன், பி.மதிவதனா, எம்.தயாகரன், எஸ்.லதீஸ்கரன், வை.சுபாஜினி, ரி.அஜீவன், எஸ்.ராஜ்குமார், எம்.காண்டீபன், எஸ்.வனஜா, ஜி.அமுதினி, ஜி.லகுதாஸ், ஏ.றெசின்சியா ஞானவதனி, எம்.சுதா, டி.மயூரன், எஸ்.பீஸ்மன், கே.துஸ்யந்தி, எஸ்.நிரிஜா, ஆர்.ராஜராஜன்,

பி.துவாரகன், எஸ்.பவானி, ஆர்.சுகிர்தா, என்.வனிதா, என்.கோபாலகிருஷ்ணன், கே.தமிழரசி, பி.சசிரஜனி, ரி.ஸ்ரீலேகா, கே.அகிலா, எஸ்.ஞானகுமார், ஜி.சிவவதனி, பி.ஜோதிலக்சுமி, எஸ்.சிவாஸ்கரன், ஆர்.சிவகுமார், எஸ்.தர்சன், ரி.சர்மிலா, வி.ஈஸ்வரி, பி.பேனாட் ரமேஸ், ரி.தயாளினி, ஜி.உபேந்திரன், எஸ்.சுகந்தினி, எஸ்.கலைவாணி, எம்.சிவானந்தன், ஏ.கமலினி, எஸ்.சுரேசினி, ஏ.வசந்தராணி, எஸ்.தர்சினி, எம்.நவதாசன், எஸ்.சுபாகரன், எஸ்.செரின் சஜிமிலோனி, ஏ.பிரிந்தினி,

எம்.தாரணி, ரி.சுகந்தினி, எம்.பாலதர்சினி, பி.பாலகிரிதரன், ஏ.அன்ரனி றெஜினோல்ட், பி.கமலதாசன், ஆர்.சசிகுமார், ஜி.கீதாஞ்சலி, எஸ்.தியாகராசா, திருமதி எஸ்.ரதிபா, கே.உதயகுமாரன், வை.பிரபாநந்தம், ஆர்.கௌரி, ரி.அஜந்தினி, பி.தர்மசீலன், எஸ்.குமாரேசசர்மா, என்.யோகேஸ்வரி, ஏ.ஆனந்தலக்சுமி, என்.ரகுநாத், எஸ்.சவாஜினி, என்.ஜெயசுரேஸ், பி.தயாபரன், கே.யசோதா, எஸ்.ஜெயவரதன், எஸ்.அமிர்தா, எஸ்.கேதாரகௌரி, எம்.சுனித்திரா, எம்.தாரணி, ஜே.ரி.லெஸ்லிநிகி, டி.சி.மேரி கனிஸ்ரா, பி.வரதராஜா, வி.சுனிதா, எஸ்.சுஜிதா, ஆர்.மைதிலி, எஸ்.ஞானரூபன்,

எஸ்.பானுரேகா, கே.வாசுகி, வி.சோபனா, சி.சசிகலா, என்.சிவசங்கர், எம்.துஸ்யந்தன, எம்.சத்தியவாணி, எஸ்.சிவசுகந்தினி, எஸ்.சஜரூபி, ஏ.சயந்தினி, என்.குணாலினி, ரி.குணவதனி, ஏ.முரளிதரன், எஸ்.சிவந்தினி, எஸ்.தமிழ்ச்செல்வி, ஜி.யாழினி, ரி.ஜெயகௌரி, வி.யூட்ராஜ், கே.நேதாநந்தன், எல்.சிவயோகவதனி, பி.பத்மநாதன், ஏ.ரஜனி, ரி.ஜெயக்குமார், எஸ்.யசோதா, ஐ.ஜெனிதா, பி.சத்தியமூர்த்தி,

கே.உஷாநந்தி, வி.செல்வராணி, பி.தயாளினி, எம்.குணாநிதி, எஸ்.சிவாஜினி, எம்.கிரிதரன், கே.யஸ்மின்ஜெபநிதி, என்.சிவரூபி, கே.கேதீஸ்வரன், வி.சுபாஜினி, எம்.தர்மலிங்கம், எம்.சூரியராஜா, ரி.சந்திரகாந், சி.அந்தோனி ஜோர்ஜ்ராஜன், என்.கண்ணதாசன், என்.துரந்தரி, என்.தாட்சாயினி, எம்.அசோக்குமார், வி.பிரபா, டி.ரஜனி, ரி.சிவகுமார், எம்.சிவசற்குணம், கே.ராதிகா, எஸ்.சிவராஜ், ரி.ஜீவஜானி, எம்.விஸ்வமூர்த்தி, வி.சுதாகரன், எஸ்.கார்த்திகா, கே.அனுசியா.

## சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்

என்.சிவநாதன், வி.ரதீஸ், கே.ரூபினி, என்.சிவசந்திரன், எஸ்.தயாளசோதி, எம்.சதீஸ்குமார், பி.சுமித்ரா, என்.சசிகுமார், பி.சிவபாலன், எஸ்.சிவாஜினி, ஏ.மோகனமாலா, கே.கிருபாநந்தி, கே.வளர்மதி, எம்.தபேந்திரன், ஜே.விஜயவாணி, கே.கவிதா, எஸ்.கிரேஸ்மேரி, ஏ.ரி.அமிர்தா, ரி.புதியராஜா,

பி.ரூபன், கே.யமுனா, பி.கௌசலா, எஸ்.சுஜாதா, ரி.பிரதீஸ்வரன், கே.செங்கமலச்செல்வி, கே.செந்தாமரையாசனி, என்.கமலினி, எல்.சி.கொனார்ட்கொலின்டன், ஆர்.ஜெகதீஸ்வரன், எஸ்.ஜெகதீஸ்வரி, கே.கவிதா, கே.கலையரசி, ஆர்.கலாஜோதி, பி.பாரதி, ஆர்.ராஜலட்சுமி, ஆர்.ராஜகோபால், என்.சுதாஜினி, வை.துஸ்யந்தினி,

வை.சுதர்சினி, ஆர்.பிரியதர்சினி, வி.கேதினி, எஸ்.சியாமளா, ரி.கீதாம்பரன், ஆர்.தவக்குமாரன், ரி.நிலாம்பரன், சற்.யூவாற்றின் பால்தாஸ், ஜே.றெஜினோல்ட், எஸ்.ஜெயசீலன்,

## பருத்தித்துறை பிரதேச செயலகம்

கே.மகாவலிராஜன், ரி.ஜெயதீபன், எஸ்.அற்புதராஜா, எம்.தவலிங்கம், கே.சுகிர்தானந்தம், வி.சபேசன், எஸ்.ஜோசப் யேசுராஜா, எம்.கனகராஜா, கே.சிறிவாணி, எம்.காண்டீபன், ஜே.குமரன்ரத்தினம், கே.நாகநாதன், என்.கேதீஸ்வரா, ரி.குருபரன், எஸ்.ஜீவதுளசி, எஸ்.சுபாசினி, ரி.பார்த்தீபன், எஸ்.தேவகுமார், எஸ்.வசந்தன், பி.பிரேமச்சந்திரன், எஸ்.சிவசுந்தர், எஸ்.சிறிஸ்கந்தராஜா, எம்.திருநிறைச்செல்வி, எஸ்.சிவகுமார், எஸ்.ஜெயந்தன், ஏ.ரூபகாந்தன், ரி.சிவாஜினி, பி.முரளிதரன், ஆர்.பார்த்தீபன், ஏ.ஆனந்தகணேசன், கே.சத்தியகுமார், ஏ.சுபாஜினி, வி.நாகேஸ்வரி, பி.வதனி, ஆர்.தனரூபன், இ.தர்சினி, கே.ஜெயக்குமார், எம்.சிவராணி, எம்.சதீஸ்குமார், எஸ்.தமயந்தி, வி.கதிர்காமலிங்கம்,

## கரவெட்டி பிரதேச செயலகம்

ஏ.டில்லிராணி, எஸ்.சுபச்செல்வன், எஸ்.குமரமனோகரி, ஆர்.ராஜேஸ்கண்ணன், ஆர்.சுனிதா, ஏ.லலிதா, ரி.தீபா, கே.வனஜா, வை.பிரமிளா, எஸ்.சாமினி, கே.அம்பிகைபாகன், ரி.மதியமுதன், எம்.செல்வரஞ்சினி, எம்.செல்வரட்ணம், பி.ரதீஸ்வரி, கே.செல்வச்சந்திரன், என்.செந்திலி, எஸ்.பாமினி, வி.சிறிசண்முகப்பிரியா, எம்.கங்கா, எஸ்.சிவச்செல்வன், எம்.அகல்யா, கே.மோகனராஜா, கே.முகுந்தராஜ்,

எஸ்.ரூபகுமார், இ.அகல்யா, ரி.வாசுகி, எஸ்.காந்தரூபி, ஆர்.சாந்தினி, ஏ.சாந்தமூர்த்தி, பி.மணிவண்ணன், எஸ்.கபிலேசன், எஸ்.மதிரஜனி, எஸ்.ரவீந்திரன், வி.அருந்தவக்குமார், கே.பத்மாணி, ரி.மஜிந்தன், கே.கோணரஞ்சன், எம்.மல்லிகாதேவி, வி.எஸ்.சிவானந்தம், என்.ரஜிதா, ரி.தவநேசன், வி.வாகீசன், பி.சந்திரவதனி, கே.பகீரூதி, பி.கனகேஸ்வரன், என்.சுரேஸ், எஸ்.சிவசங்கர், ஆர்.செல்வமதி, ரி.உமா,

எஸ்.சுகந்தினி, ரி.சித்ரங்கி, கே.சுசிலா, வி.மைதிலி, எஸ்.விஜயந்தி, பி.சுகந்தன், கே.முருகமூர்த்தி, எஸ்.கார்திகா, எஸ்.சித்ரா, ரி.சுகுமார், வி.சாந்தினி, ஜே.அகிலன், எஸ்.மணிமேகலை, எஸ்.நேசலிங்கம், வி.திவ்வியாநந்தன், எஸ்.கஸ்தூரி, கே.பார்த்தீபன், என்.நந்தகுமார், ரி.புஸ்பதேவி, எஸ்.சுதர்சன், ஐ.கலாநீ, என்.சாலினி, எஸ்.துஷிதா, பி.உஷாஜினி, எஸ்.சுபாசினி, வி.ஆனந்தராணி,

## சங்கானை பிரதேச செயலகம்

கே.ஜான்சிராணி, பி.கஜலவன், பி.புனிதா, கே.கனேசலிங்கம், வி.ஜெயவாணி, எஸ்.மாலினி, ரி.உதயமலர், எஸ்.காந்தன், எஸ்.லோகேஸ்வரி, ரி.பிரதீபன், எஸ்.உமாதேவி, சர்மா, எஸ்.மாதினி, வி.உமாதேவி, ரி.முருகதாசன், கே.லகிர்தா, ஏ.வாசுகி, வி.சாந்தினி, எஸ்.சிவச்செல்வன், எஸ்.சிவநாதன், ரி.சுகந்தினி, எம்.அருள்மொழி, வயசோதா, என்.யசோதரூபி, பி.சிவச்செல்வி, எஸ்.யோகேஸ்வரி, பி.ஜெயராணி, எஸ்.லகிதா, பி.கிருஷ்ணமாலா, கே.கந்தசாமி, ரி.தர்சினி, பி.பானுமதி, எஸ்.குகவேதினி, என்.கல்யாணி, வி.வரகனி, ரி.சுரேஸ்குமார், ரி.சுஜாதா, எஸ்.பிரபாகரன், எம்.மாலதி, என்.குகரன்,

## காரைநகர் பிரதேச செயலகம்

வி.தயாளினி, என்.கலாசக்தி, எம்.சாந்தினிதேவி, வி.கிருஷ்ணவேணி, பி.அற்புதமலர், கே.ஜெயந்தினி, ரி.ஜெயரூபன், ஜெ.சிவமலர், ஆர்.சிவசக்தி, ஆர்.வாசுகி, கே.பேரின்பகுமார், ஏ.பத்மலோ, வி.கலைச்செல்வி, ஐ.குகனேஸ்வரி, எஸ்.பி.வாகீசன், எஸ்.தவராசா, எஸ்.அனிருதன், ஐ.சிவகலா, எஸ்.செல்வச்சந்திரன், டி.எம்.பேரானந்தினி, கே.தவக்குமரன், இ.ஜெயந்தி, ரி.குலதீபன், எஸ்.கவிதா, மாரிமுத்து, எஸ்.ரூபராசன், என்டபிள்யூ.சாந்தகுமார், கே.யாழினி, பி.சோமசுந்தரம், ஆர்.சிவாஜினி, ஜி.விஜயரூபி, ஜி.சிவகுமார், என்.கருணாநந்தன், ரி.புவேந்திரகுமார், இ.இந்திரகுமார், ஜி.ஜங்கரன், ஐ.தேவகி,

## சாவகச்சேரி பிரதேச செயலகம்

ப.மயூரன்,

## வேலணை பிரதேச செயலகம்

எம்.பிரபா,

# ஈராக்கில் பயங்கர தாக்குதல் 113 பேர் கொல்லப்பட்டனர்



(பக்தாத்)

பக்தாத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற இரண்டு பாரிய குண்டு வெடிப்புக்கள் உட்பட பலவேறு சிறு தாக்குதல்களில் ஈராக் படையினர், தீவிரவாதிகள், பொதுமக்கள் உள்ளிட்ட 113 பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

பக்குபாவின் பொலிஸ் நிலையத்திற்கருகிலுள்ள சந்தைக்கு டொயோட்டா ரக மினிபஸ் ஒன்றைச் செலுத்திவந்த தற்கொலைக்குண்டுதாரி அதனை வெடிக்க வைத்த பொழுது 68 பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். அவ்வழியால் வந்து கொண்டிருந்த பயணிகள் பஸ் ஒன்றிலிருந்த 21 பேரும் இதில் அடங்குவர் 56 பொதுமக்கள் காயமடைந்தனர்.

தென்பகுதிய ஈராக்கில் அமெரிக்கப் படைகளுடன் இடம்பெற்ற தாக்குதல்களில் 35 தீவிரவாதிகள் உள்ளடங்கலாக 42 பேர் கொல்லப்பட்டனர். இது தவிர ஆங்காங்கே இடம்பெற்ற வெவ்வேறு சிறு சிறு தாக்குதல்களில் 3 அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இத்தாக்குதலைத் தொடர்ந்து ஈராக்கில் இறந்த அமெரிக்கர்களின் தொகை 911 ஆக அதிகரித்துள்ளது. இவர்களின் 676 பேர் சண்டையின் போது கொல்லப்பட்டவர்களாவர். (யே)

# ரஷ்யாவின் மிகப் பெரிய யூகோஸ் நிறுவனத்தை மூடுமாறு உத்தரவு!

(மொஸ்கோ)

ரஷ்யாவின் மிகப்பெரிய எண்ணை உற்பத்தி நிறுவனமான யூகோஸ் நிறுவனம் தனது எண்ணை உற்பத்தியை உடனடியாக நிறுத்துவதோடு அதன் மூன்று துணை நிறுவனங்களும் தமது விற்பனையை உடனடியாக நிறுத்தவேண்டுமென்று ரஷ்ய நீதியமைச்சு அறிவித்துள்ளது.

3.4 பில்லியன் டொலர்களை 2000ம் ஆண்டுக்கான வரி நிலுவைப்பணமாகச் செலுத்தவேண்டிய நிறுவனம் 2001-2003 வரையும் மேலும் பல பில்லியன் டொலர்களைச் செலுத்தவேண்டிய நிலையிலிருக்கிறது.



யூகோஸ் நிறுவனத்தின் தலைவர் கொடோர் கொவ்ஸ்கி வரி ஏய்ப்பு, ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்களில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். ஆயுதம் தாங்கிய படையினர் தற்பொழுது அந்நிறுவனத்தைக் காவல் செய்கின்றனர். எதிர்க் கட்சியினருடன் யூகோஸ் தலைவர் கைகோர்த்ததன் காரணமாக அரசாங்கம் அவரைப் பழிவாங்குவதாக யூகோஸ் அதிகாரிகள் குற்றம் சுமத்துகின்றனர். (யே)

# இந்தியாவிற்கும் ஈழத் தமிழர்களுக்கும் உள்ள உறவு என்றைக்கும் நிலைத்திருக்கும்

## பத்திரிகையாளர் சந்திப்பில் வை.கோ

(இந்தியா)

ஈழத்தமிழர்கள் என்றைக்கும் இந்தியாவிற்கு உற்ற நண்பர்களாக, சகோதரர்களாகத்தான் இருப்பார்கள். அவர்கள் எமது சகோதரர்கள், ஆகையால், அவர்களுடைய நலனைப் பாதுகாக்க வேண்டியது எமது கடமை.

ம.தி.மு.க.வின் பொதுச் செயலாளர் வை.கோபாலசாமி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர் சிங்கைச் சந்தித்துக் கலந்துரையாடியதன் பின் ஊடகவியலாளர்களுக்கு அளித்த செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

வைகோ மேலும் கூறுகையில், பாகிஸ்தான், சீனா, அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கையில் காலூன்ற முயல்கின்ற சூழ்நிலைகள் தொடர்பாக நட்வர் சிங்கிடம் எடுத்துக் கூறினேன்.


அத்துடன். சமாதானப் பேச்சு வார்த்தை வெற்றி பெறக் கூடிய வகையில் இந்தியாவின் அணுகுமுறை இருக்கவேண்டும். எந்த விதத்திலும் ஈழத்தமிழர்களுக்கு பாதகமான ஒரு அணுகுமுறையிலும் இந்தியா ஈடுபட்டுவிடக்கூடாது.

இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையில் இராணுவ ஒப்பந்தம் ஏற்படப்போவதாக ஊகமான செய்திகள் இலங்கை அரசு தரப்பில் இருந்து சொல்லப்பட்டன.

இம்மாதிரியான ஒப்பந்தம் ஏற்படுவது தமிழர்களுக்குக் கேடுவிளைவிக்கக் கூடும் என்பதனால் அப்படி ஒரு ஒப்பந்தம் செய்யக் கூடாது.

இந்தியா - இலங்கை இராணுவ ஒப்பந்தம் என்ற பேச்சு முன்னர் இருந்த அரசாங்க காலத்திலும் அடிபட்டது. இதனை நான் சிறையில் இருந்து கடுமையாகக் கண்டித்து நான் கடிதம் எழுதினேன். எனவே, இம்மாதிரியான ஒப்பந்தம் ஏற்படும் என்ற கவலை எனக்கில்லை.

ஈழத்தமிழர்கள் பிரச்சினையினை இந்திய அரசு தனக்குச் சாதகமாக ஆக்கிக் கொள்ள முடியும் என்று இலங்கை அரசு நினைக்குமானால் அம்மாதிரியான எண்ணம் ஈடேறவிடாமல் நான் தொடர்ந்து பாடுபடுவேன் என மேலும் தெரிவித்தார். (உ-121)



# இன்றைய தேர்தல் முறை மூலம் மக்களைத் திருப்திப்படுத்த முடியாது

## அமைச்சர் தினேஸ்

தற்போதைய தேர்தல் முறை மூலமாக மக்களின் எதிர்பார்ப்புக்களை பூர்த்திசெய்ய முடியாதிருப்பதாக நகர அபிவிருத்தி நீர் வழங்கல் துறை அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இந்தக் கருத்தினைத் தெரிவித்தார்.

தற்போது நடைமுறையில் உள்ள தேர்தல் முறையின் காரணமாக பல்வேறு நெருக்கடிகள் ஏற்படுகின்றன. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரினால் மக்களுக்கு நிரந்தரமாகக் கிடைக்கவேண்டிய பிரதேச தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியாத நிலை இந்தத் தேர்தல் முறையினால் ஏற்பட்டுள்ளது.

அத்துடன், மோசடிகள் கூடுதலாக இடம்பெறக்கூடிய வாய்ப்புக்களும் ஏற்பட்டுள்ளன. இந்தத் தேர்தல் முறையினை மாற்றும் யோசனையினை பாராளுமன்றத்தில் முன்வைத்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-121)

## திலங்க சுமதிபாலவின்

# பிணையை இரத்துச் செய்யக்கோரி உயர் நீதிமன்றில் விசேட மனு

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் சபையின் முன்னாள் தலைவர் திலங்க சுமதிபாலவுக்கு வழங்கப்பட்ட பிணையை இரத்து செய்யுமாறு கோரி உயர் நீதிமன்றில் விசேட மனுவொன்றை சட்டமாஅதிபர் தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில் திலங்க சுமதிபாலவுக்கு பிணை வழங்க மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் குழு மேற்கொண்ட நடைமுறை சட்டத்திற்கு முரணானது என்று சட்டமாஅதிபர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த 18ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை இரத்துச்செய்வதற்கான கட்டளையை பிறப்பிக்குமாறு சட்டமாஅதிபரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடியகல்வு, குடிவரவு சட்டத்தின் கீழான குற்றச்சாட்டின் அடிப்படையில் திலங்க சுமதிபாலவுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதும் சட்டமாஅதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் திலங்க சுமதிபால பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## பத்திரிகையாளர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த காலங்களில் போரினால் பாதிக்கப்பட்ட வடபகுதியிலுள்ள பெண்கள், சிறுவர்கள் போன்றோரின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதன் ஊடாக அவர்களை வளப்படுத்துவதிலும் அவர்களது உரிமைகளைப் பாதுகாப்பதிலும் அதிக அக்கறை காட்டி செயற்பட்டு வருகின்ற யாழ்.சமூக செயற்பாட்டு மையம்,

தற்போது இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வருகின்ற சிறுவர்களுக்கு கல்வியுடன் கூடிய அத்தியாவசிய தேவைகளை அவர்கள் பெற்றுக்கொள்வதற்காகப் புதிய திட்டத்தினை வடிவமைத்து செயற்படுத்தி வருகின்றது.

இதனடிப்படையில், எதிர்வரும் ஒக்டோபர் -01 சிறுவர் தினம் ஆதலால் மேற்படி, திட்டத்தில் அடங்கியுள்ள சில உபதலைப்புக்கள் தொடர்பாக, அதன் விழிப்புணர்வு மக்கள் மத்தியில் போய் சேரவேண்டுமென்ற நோக்கோடு சிறிய அளவிலான பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்று ஏற்பாடு செய்துள்ளது.

இன்று பி.ப. 2.00மணிமுதல் 3.00 மணி வரை யாழ்.சமூக செயற்பாட்டு மைய கேட்போர் கூடத்தில் இந்தப் பத்திரிகையாளர் சந்திப்பு இடம்பெறவுள்ளது. (உ)

## முஸ்லிம் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

நாடளாவிய ரீதியில் உள்ள முஸ்லிம் பாடசாலைகளில் 4 ஆயிரத்து 500ற்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு வெற்றிடங்கள் நிலவுகின்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளாதுவிட்டால், முஸ்லிம் சமூகத்தின் கல்வித்துறையில் எதிர்காலத்தில் பாரிய பின்னடைவு ஏற்படும் என முஸ்லிம் சமூக பொது அமைப்புக்களும் கல்விமான்களும் எச்சரித்துள்ளனர். (உ-60,10)

# கீற்றுமுடைந்து எம்.ஏ.படிப்பை முடித்த ஏழைப் பெண்

எவ்வித அடிப்படை வசதியும் இல்லாத ஒரு குக்கிராமத்தைச் சேர்ந்த தமிழரசி என்ற ஏழைப்



பெண் ஒருவர், கீற்று முடைந்து அதிலிருந்து கிடைத்த வருமானத்தின் மூலம் எம்.ஃபில் (தமிழ்) படிப்பை எட்டிப் பிடித்துள்ளார்.

வேலூர் மாவட்டம் பள்ளிகொண்டாவிலிருந்து 5 கி.மீ தொலைவில் உள்ளது கந்தனேரி கிராமம். இதையடுத்து 3.கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது குக்கிராமமான பட்டரைத்தார்.

அங்கு வயல்வெளிக் கொட்டகையில் வசித்து வருகிறது தமிழரசியின் குடும்பம்.


15 தென்னை மரங்கள் அடங்கிய சிறு நிலத்துண்டுதான் அவர்களது சொத்து. இதிலிருந்து கிடைக்கும் வருவாயைத் தவிரக் கூலிக்குக் கீற்று முடையும் தொழிலையும் இக் குடும்பத்தார் செய்து வருகிறார்கள்.

பிளஸ் டூவரை படித்த தமிழரசி ஓய்வு நேரத்தில் கீற்று முடையும் தொழிலைச் செய்து அதன் மூலம் கிடைக்கும் கூலியைப் படிப்புச் செலவுக்குப் பயன்படுத்திக் கொண்டார்.

கல்லூரிப் படிப்பைத் தொடரப் பணவசதி இல்லாத காரணத்தால் ஓராண்டு காலம் வீட்டில் முடங்கிக் கிடந்த தமிழரசி, அக்காலத்தில் கீற்று முடைந்து சேர்த்த பணத்தைக் கொண்டு படிப்பைத் தொடர்ந்து எம்.ஏ.பரீட்சையில் இரண்டாம் நிலையில் தேர்ச்சி பெற்றார்.

காலை 7 மணிக்கு வீட்டிலிருந்து புறப்படும் இவர் கால் நடையாக 5 கி.மீ. தூரத்தைக் கடந்து அங்கிருந்து பஸ் மூலம் வேலூர் சென்று மற்றொரு பஸ் மூலம் கல்லூரியை அடைவதும் மாலை புறப்பட்டு இதே மாதிரி இரவு 7 மணியளவில் வீடு திரும்புவதும் வழக்கம்.

வீடு திரும்பிய பின் இரவு 11 மணிவரை கீற்று முடைந்து தனது படிப்புச் செலவுக்கான பணத்தைத் தேடிக் கொள்வார். ஆராய்ச்சிப் படிப்பை (பி.எச்டி) முடித்து ஆசிரியையாகத் தமிழுக்குத் தொண்டு புரிய வேண்டுமென்பதே இவரது ஆசை. (து)




# இந்தியச் செய்திகள்

## முத்திரைத்தாள் மோசடியில் அரசு நடவடிக்கை எடுக்காதது ஏன்?

### சி.பி.ஐ. விசாரணையில் புதுத்திருப்பம்

(சென்னை)

தமிழ் நாட்டில் போலி முத்திரைத்தாள் விநியோகம் குறித்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே பதிவுத்துறை மூத்தஅதிகாரி ஒருவர் மாநில அரசுக்கு இரகசிய அறிக்கை அனுப்பியுள்ளார் என்பது தற்போது தெரியவந்துள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தை உலுப்பியுள்ள 30 ஆயிரம்கோடி ரூபா முத்திரைத்தாள் மோசடி தொடர்பாக தமிழ் நாட்டின் டி.ஐ.ஜி முகமது அலி உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் போலி முத்திரைத்தாள் விநியோகம் குறித்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே பதிவுத்துறை மூத்தஅதிகாரியொருவர் தமிழக அரசுக்கு இரகசிய அறிக்கையொன்றை அனுப்பிய விவகாரம் சி.பி.ஐ.க்குத் தற்போது தெரியவந்துள்ளதாகக் கூறப்படுகிறது. இதையடுத்து போலி முத்திரைத்தாள் நடமாட்டம் குறித்து பதிவுத்துறை அதிகாரி அரசுக்கு அறிக்கை அனுப்பிய பிறகும் அது பற்றி நடவடிக்கை எடுக்காதது ஏன் என விசாரணை நடத்தப்படவுள்ளது. (து)



பாட்னா சென்ற பிரதமர் மன்மோகன் சிங் விமானத்திலிருந்தவாறு வெள்ளம் சூழ்ந்த பகுதிகளைப் பார்வையிட்டார்.

## கொள்ளையரால் தந்தை, மகன் வெட்டிக்கொலை

கடலூரில் முகமூடிக் கொள்ளையர்கள் தந்தையையும் மகனையும் வெட்டிக்கொன்றுவிட்டு பல இலட்சம் ரூபா மதிப்புள்ள தங்க நகை, மற்றும் பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தக் கொடூர சம்பவம் நகரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடலூர் புதுநகர் பகுதியில் வசித்து வந்தவர் எண்ணெய் வியாபாரி சண்முகம். நேற்றுமுன்தினம் கதவு தடடப்படும் சபதம் கேட்டு வெளியே வந்த சண்முகம், அவரது மகன் சங்கரன், மருமகள் யமுனாராணி ஆகியோரைக் கொள்ளையர்கள் சரமாரியாக வெட்டித்தள்ளினர்.

இதில் சண்முகமும் அவரது மகன் சங்கரனும் அதே இடத்தில் உயிரிழந்தனர்.பின்னர் கொள்ளையர்கள் வீட்டிலிருந்த நகை, ஏராளமான பணத்தைக் கொள்ளையடித்துக் கொண்டு தப்பிச் சென்றுவிட்டார்கள்.

பொலிஸ் அதிகாரிகள் சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு வந்து விசாரணை நடத்தினார்கள். தப்பிச்சென்ற முகமூடிக்கொள்ளையர்களைப் பிடிக்கத் தனிப்படை அமைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளளனர்.

கொளளையர்கள் வெட்டியதால் படுகாயமடைந்த யமுனாராணி சிகிச்சைக்காக மருத்துவமனையில அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.(து)

## சட்டமன்றத் தலைவரின் தன்னிச்சை உத்தரவு

தமிழக சட்டப் பேரவையில் விவாதமின்றி நிறைவேற்றப்பட்ட மானியக் கோரிக்கைகள் பற்றி நிதியமைச்சர் பொன்னையன் பேசியது தொடர்பான பிரச்சினையில் உரிமை மீறல் குழுவின் ஆய்வும் முடிவும் பேரவையால் அறிவிக்கப்படும்வரை அது பற்றிப் பத்திரிகைகளில் எழுதுவதோ கருத்துத் தெரிவிப்பதோ கூடாது எனச் சட்டப் பேரவைத் தலைவர் காளிமுத்து உத்தரவிட்டுள்ளார்.

நிதியமைச்சர் பொன்னையன் மானியக் கோரிக்கைக்கும் மசோதாவுக்குமுள்ள வித்தியாசம் தெரியாமல் உண்மைக்குப் புறம்பாகப் பேசியிருக்கிறார் என்ற கருணாநிதியின் குற்றச்சாட்டையடுத்தே இந்த உத்தரவு [illegible] (து)

## வெள்ளி முற்றம்

# தூக்கம்

**அகியோபி**

பூவுடனும் பொட்டுடனும் சிரித்திருந்த அந்தச் சித்திரை நிலவும் விதியென்னும் கரு முகிலால் பூவையும் பொட்டையும் இழந்து பொலிவிழந்தது. யார் செய்தபாவமோ சின்ன வயதில்....

வழமை போன்று சமயல் வேலைகளில் ஈடுபட்டிருந்தாள் சுஜா. எழில் பொங்கும் தோற்றம் முடையவள் சுஜா! அவளின் அங்க இலட்சணங்கள் அத்தனையும் பிரமாதம் .ஏறு நெற்றி! வீற் புருவங்கள்! காண் போரைக் கௌவ்வி இழுக்கும் தூண்டில விழிகள்! நிமிர்ந்து விரிந்து நுனி ஒடுங்கிய குமிழ் மூக்கு சிறு சிற்பி போன்ற சிவந்த உதடு அதனுளுள்ளே முத்துவரிசைகள் இவையத்தனையையும் சேர்நத பரந்த முகம் விம்மிப்பருத்த மார்பு, சிற்றிடை, நீண்டகால்,கை அவற்றிலே குள்ளமான விரல்கள்... அவளது அங்க இலட்சணங்கள் அத்தனையும் அம்சம் தான். இவளை இவ்வாறு படைப்பதற்காய் பிரமன் எத்தனை நாட்களைச் செலவு செய்தானோ என்று பார்ப்பவர்கள் ஐயுறுவர் யாரது கண்ணூறோ அவளது....

"பிள்ளை!பிள்ளை பங்காரடி யாரோ வரீனம்'' எனத்தாய் சின்னப்பொடி கத்தினாள். சின்னப் பொடி திடகாத்திரமான கிழவி அவவாள் இப்போது எழுந்து நடக்கவே முடியாது. அவவின் வாழ்வும் அப்படித் தான் ஏதோ தனது முயற்சியால் பிள்ளைகளை வளர்த்து எல்லோரையும் ஆளாக்கி விட்டா! இன்று சுஜா ஒருத்தியைத்தவிர ஏனைய பிள்ளைகள் வெளிநாட்டில் வசிக்கின்றனர். சுஜாவையும் அவர்கள் அங்கு வருமாறு அழைத்த போது சுஜா மறுத்துவிட்டாள். சுஜாவின் மறுப்பின் காரணம் அவளது தாய்தான். தானும் அங்கு போய்விட்டால் தாயின் நிலை பரிதாபம் என்பதை உணர்ந்த சுஜா தாய்க்குத் துணையாக இங்கேயே இருந்தாள். இன்று சின்னப்பொடிக்கிழவியின் கவலையெல்லாம் சுஜா வைப்பற்றியது தான்.

சுஜா திருமணஞ்செய்து ஆறு வருடங்கள் முடியுமுன்னரே கணவனையிழந்துவிட்டாள். சின்னப் பொடிக்கிழவிக்கு அது ஆறாகக் கவலையாகிவிட்டது. "கண் கெட்ட கடவுள் அவரைத்தான் பறிச்சுதெண்டால் வந்த மருமகனையும மல்லலே பறித்துக்கொண்டு போயிட்டுது. சரி அதுதான் போச்சு அவளுக்குகென்று ஒரு பிள்ளையையேனுங்கொடுத்துதே கண் கெட்ட கடவுள்'' என அடிக்கடி கடவுளை முனிந்த படியிருப்பா! 'எல்லாம் விதி விளையாட்டுத் தானே'' என்று தன்னுள்ளே சமாதானங் கூறி அடங்குவா!

• "யா் மோனை வாறது" "அது நான் சீலன்" என்று கூறியவாறே உளநுழைந்தான் சீலன். சீலன் ஓர் அரசாங்க உத்தியோகத்தன். அவன்பள்ளி மாணவனாக இருக்கும் காலத்தில் இருந்தே சின்னப்பொடிக் கிழவியின் குடும்பத்தாரோடு நல்ல ஐக்கியமாகப் பழகுபவன் சுஜாவின் நிலையினை நினைத்து அவனும் வேதனைப் பட்டுக்கொண்டேயிருந்தான். சீலன் அவர்களுக்குச் சொந்த மில்லை. உறவுமில்லை. இடப் பெயர்வால் வந்த சினேகித உறவு. சின்னப்பொடிக கிழவியாககள் இடம் பெயர்ந்து சீலனின் ஊரில்கான் சுஞ்சம் பகுந்திருநதனர். அநதக் காலந் தொட்டு இன்று வரை அவனால் அவர்களை மறக்கவே முடியவில்லை. தங்கள் குடும்பத்தில் ஒருவராகவே அவர்களை அவன நினைத்திருக்கின்றான். அதனால் தூரமஅதிகம் என்றாலும் மாதத்தல் ஒரு தடவையேனும் அவர்களை வந்து பார்த்துக் கொண்டு பேவான்.சீலன் இப்போது திருமணமாகி ஓர் பிள்ளையின் தந்தையாகவுள்ளான். அவனுக்கு மது அருந்தும் பழக்கம் சனியன் போல் தொடர்ந்த வண்ணமே யிருக்கின்றது.

சீலனின் குரல் கேட்டதும் அடுக்களைக்குளிருந்து வெளியே வந்தாள் சுஜா! வழக்கம் போல அந்தக் க்வர்ச்சியன சிறு உதட்டில். புன்னனைப் பூக்களை மலரவிட்டவாறே "சீலன் இருங்கோ வாறன்'' எனக் கூறி அடுக்களைக்குள் நுழைய முற்பட்ட சுஜாவை 'சுஜா எனக்குத் தேத் தண்ணி ஒன்றும் வேண்டாம்'' "அப்ப சாப்பிடுங்கோவன்' "எனக்குச் சாப்பாடும் வேண்டாம் என்ன சாப்பாடும் இம்...'' என்று அலட்சியப் பெருமூச்சுவிட்டான் சீலன். "என்ன இண்டைக்கு ஆள்கொஞ்சம் வித்தியாசமாக இருககு" எனக்கேட்டபடியே அவனை உற்றுப்பார்த்தாள் சுஜா! வீங்கச் சிவந்த விழிகள், விகாரப்பட்ட முகம்,மூக்கின் மேற்பகுதியில் அரும்பு வியர்வைத்துளிகள், தடுமாறும் மொழிகள் "வித்தியாசந்தான் ஆள் வித்தியா சமாகத்தான் வந்திருக்கின்றா. " எனத் தனக்குள் எண்ணிக் கொண்டு சிரித்தபடியே

"ஏன் சீலன் உப்படியெல்லாம் செய்கிறியள் உங்கள் தொழிலுக்கு நீங்கள் செய்வதெல்லாம் சரியோ? அடுத்தவை மகிக்கமாட்டினம ஏன் வீட்டிலேயே மதிப்பிருக்காது எவ்வளவு நல்ல பொடியன் ஏன் உப்படியெல்லாம் கண் மூக்குத்தெரியாமல் குடிக்கிறியள நீங்களே யோசித்துப் பாருங்கள். நீங்கள் செய்வது சரியோ வென்று" சுஜாவின் நீண்ட மதியுரைக்குப்பின்னர் " எனக்கும் விளங்குது சுஜா நான் செய்வது பிழை என்று. என்ன செய்வது என்னாலே குடிக்காமலிருக்கே லாதாம் ஏனிந்த நாசமறுந்த பழககத்தைப்பழகினேனென்று கிடககு இதாலே எல்லா இடமும் பிரச்சினைதலைதானாகவே பூமியைப் பார்த்து கவிழ்வதும் நிமிர்வது மாக இருக்கக் கூறிக் கொண்டேயிருந்தான். சற்று நிமிடங்கள் மௌனமாயிருந்து விட்டுச் சுஜா மீண்டும் தொடர்ந் தாள்.

''மனமுண்டானால் இடமுண்டு மனிதனால் முடியாத காரியந்தான்" என்னவுண்டு எல்லாம் நீங்கள் நினைத்தால் சரி! யாரும் சொல்லிக்குடியை விடுகிறவனை நான் நம்பமாட்டேன் தானாக உணர்ந்து விடுபவனைத் தான் யாரும் நம்புவார்கள். நான் உங்களைப் போல் பெரிய படிப்பொன்றும் படிக்கவில்லை. எங்களோடு அன்பாகப் "பழகுறீங் களேயென் பதற்காகச் சொன்னேன். ஏதும் பிழையிருந்தால் மன்னிக் கவும்'' "சுஜா உது எல்லாம் கேட்டுக்கேட்டுச் சலிச்சுப் போச்சு இந்தக் குடியைப் பொறுத்த வரை என்காது செவிடன்காது தான் சரி! சரி! வேறு என்ன புதினம்.

"வேறையென்ன புதினங்கள் எல்லாம் சோகம் தான். ஆண் துணையில்லாவிட்டால் எல்லாங் கஸ்ரம் தான் எனக் கூறியசுஜாவின கண்கள் பனித்தன. "சுஜா நீங்கள் இல்லையென்று அழுகிறியள் சிலதுகள் புருஸன்மார் செய்கிற அட்டகாசம் தாங்காமல் எப்பசாவான் என்றல்லே இருக்குதுகள்'' "சீலன் அப்படியொரு பெண்ணும் நினைக்கமாட்டள். பொறுப் பில்லாத கணவனை எந்தப் பெண்ணுந் திட்டிக்கொண்டு தானேயிருப்பாள். ஏன் உங்களுக்கேதும் பிரச்சினையே" சுஜாவின் தடீர்க்கேள்வி சீலனை திடுக்கிட வைத்ததும் "பிரச்சினையொன்று மில்லையக்கா இது தான்....." சீலன் கூறிமுடித்ததும் "அது உலக நியதி சீலன் உள்ளவள் மெத்திப்போச்சென்று அழுவாள் இல்லாதவள் இல்லையென்று அழுவாள் இம்...! கொஞ்சமிருங்கோ அடுப்பிலே கறிவைச்சிட்டுவந்தனான் இறக்கிப் போட்டு வாறேன்'' என்று கூறியபடியே அடுக்களையை நோக்கி விரைந்தாள் சுஜா! சீலன் பின் தொடர்ந்தான். அவள் கறியை இறக்கி விட்டு வெளியே வந்ததும் கதவை மறித்துக்கொண்டிருந்த சீலன் "சுஜா சொல்லுங்கோ எனக்கு என்ன குறை அவளது கண்கள் மாறின வழமையான சிரிப்புடன் "ஏன் என்ன" விழிகளை வினாக் குறியாக்கினாள் சுஜா. "எனக்கு என்ன சொல்லப்போறியள்'' நானென்ன செய்யிறது என சுஜா கேட்குமுன்னே அவளது கரங்களைப் பற்றியிழுத்தான், அந்தப் பூம்பட்டு உதட்டில் முத்தமிட்டான். அதிர்ந்தே போனாள் சுஜா! அங்கிருந்து ஒருவாறு மீண்டும் தாயிருக்குமிடத்தில் சென்று அமர்ந்து கொண்டாள்.

அவளை வருமாறு சீலன் விழிகளால் அழைத்தான். அவள் மறுத்துவிட்டு அங்கேய இருந்தாள்.




நடந்தவை எதையுமே அறியாத சின்னப் பொடிக் கிழவி "எடே! மோனை செண்டு போச்சு வீட்டிலே தேடுவின மல்லே போவன்ரா!'' எனக் கூறியதும் "ஓமணை ஓம்! நான் போயிற்று வாறன்" எனக் கூறிக்கொண்டே படலையைத் திறந்தான்.எதிரே சுஜா வந்தாள். பார்ததாள் அவனும் பார்த்தான். "நான் போயிற்றுவாறன்'' எனச் சீலன் கூறியதும் "நல்ல ஆக்களென்ன தனியா இருக்கிற என்னடம் நீங்கள் நடந்து கொண்ட விதம் சரியே தயவு செய்து இனி அந்த எண்ணத் தோடு இந்தப் படலை திறக்க வேண்டாம் வருகில் சகோதர உணர்வோடு வாங்கோ. யாரும் கண்டிருந் தால் இந்தப் பத்து வருஷம் நான் கட்டடிக் காத தமானம் என்னாயிருக்கும். நல்லாப் பழகின பழக்கத் திற்காக மன்னிக்கேன் வேறுயாருமெண்டால் இப்ப நடந் திருப்பதே வேறை'' "சரி நான் செய்தது பிழை என்ன செய்கிற தெனறு எனக்கே தெரியவில்லை" எனக்கூறிச் சீலன் தலைகவிழ.

என்ரை வயசென்ன உங்கடை வயசென்ன எத்தனையோ பொறாமைத்தீ நாக்குகள் சுட்ட போதும் எத்தனையோ காமக் கண்கள் பங்குபோட நினைத்த போதும் அசையாமலிருந்த என்னை ஒரு நிமிஷத்தில் உசுப்பிவிட்டாயே ஏதோ பழகின பழக்கத்திற்காய மனனிக்கின்றேன். பிறகும் வாங்கோ சகோதர உணர்வோடு வாங்கோ எனச் சுஜா கூறி முடித்ததும் சீலனின் கன்னங்களில் ஆயிரம் செருப்புகளால் அடித்தாற் போன்ற ஓர் உணர்வு உள் ளத்தில் எழுந்தது. அவ் உள்ள உறுத் தலையும் பொறுத்துக் கொணடு சரி நான் போயிற்று வாறன் அதற்கு முன்னா ஓர் விஷயம் உங்க்ளுக்கு என்ன வயதிருந்தாலும் இந்தத் தேன் சுரக்கும் உதடு களின் வயது என்றும் பதினாறு தான் எனக் கூறிக் கலகலவென்று சிரித்தான். பின் எல்லாம் பகிடிக்குக் கூறினேன் எனக் கூறிவிட்டு எல்லாம் வெறி செய்த தாககம் எனத் தனக்குள்ளேயே எண்ணிக்கொண்டு புறப்பட்டான் சீலன்.!

*(யாவும் கற்பனை)*

## ஜே.வி.பி. -ஜனாதிபதி முரண்பாடு முற்றுகிறது

(கொழும்பு)

ஜே.வி.பி.யில் அங்கம் வகிக்கும் நீர்ப்பாசன அமைச்சர் அநுரா குமார திசநாயக்கவின் அமைச்சின் கீழ் இருந்த 4 முக்கிய செயற்திட்டங்களை, ராஜரட்ட ஆற்றுவள முன்னேற்ற அமைச்சின் கீழ் திடீரென ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா மாற்றியதன் காரணமாக இரு தரப்புக்கும் இடையில் முறுகல் நிலை மீண்டும் உருவாகியுள்ளது.

தற்போதைய அரசியல் யாப்பின் கீழ், ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள சா்வ அதிகாரத்தின் கீழ், சட்டபூர்வமாகவே இவை மாற்றப்பட்டுள்ளதாகவும் இதற்கான உத்தியோகபூர்வ உத்தரவை சட்டப்படி ஜனாதிபதி எழுத்தில் கொடுத்துள்ளதாகவும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், விவசாய அமைச்சின் கீழ் இருந்த செயற்திட்டங்களை, தங்களிடம் கலந்தாலோசிக்காது திடீரென ஜனாதிபதி தனது அதிகாரங்களைப் பாவித்து வேறொரு அமைச்சின் கீழ் கொண்டுவந்திருப்பது மாபெரும் தவறு என்று ஜே.வி.பி. அறிவித்துள்ளது. இதற்கான தங்களது எதிர்ப்பை எழுத்தில் வழங்கியுள்ள ஜே.வி.பி யின் தலைமை, இது குறித்து ஜனாதிபதியுடன் அவசர உயர்மட்டச் சந்திப்பிற்கும் வாய்ப்புத் தருமாறு கோரியுள்ளது.

(உ-121)

# இன்று ஒரு தகவல்

## இரு வழிப்பறிக்கொள்ளையர்கள்

ஒரு வெளியூருக்குப் போய் விட்டுத் திரும்பி வந்து கொண்டிருக்கின்றோம். இருட்டி விட்டது. காட்டுப் பாதை கையில் ஒரு மெழுகுதிரியை வைத்துக் கொண்டு அந்த வெளிச்சத்தைக் கொண்டு வழியைப் புரிந்து கொண்டு நடந்து வருகிறோம். திடீரென்று வந்து வழிமறிக்கிறார்கள் வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள். நம்மிடமுள்ள எல்லாவற்றையும் கொள்ளையடித்துக் கொண்டுபோய் விடுகிறார்கள்.

இந்த சமயத்தில் நமக்கு எவ்வளவு வேதனையாக இருக்கும். அதைக் கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். எதற்கு இப்படி நினைத்துப் பார்க்கச் சொல்கிறேன் என்றால் அதேவேதனை நமது ஆன்மிகப் பயணத்திலும் ஏற்படுவதற்குச் சந்தர்ப்பம் இருப்பதாகச் சொல்கின்றனர் பெரியோர். ஏனென்றால் ஆன்மிகத்திலும் நடுவில் வழிப்பறி செய்ய இருவர் வருவார்களாம். அந்த இருவர் யாரென இப்போது அறிந்து கொள்வோம்.

ஆன்மிகப் பயணத்தில் நாம் ஒரு எல்லையை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறோம். 'விவேகம்' என்ற விலை உயர்ந்த பொருளைக் கையில் வைத்துக் கொண்டு போய்க் கொண்டிருக்கிறோம். அதைக கொண்டுதான் நாம் எது சரி. எது பிழை என்பதைத் தீர்மானித்துக் கொண்டு பயணத்தைத் தொடர முடியும்.

விவேகம் இல்லாவிட்டால் நாம் அந்தப் பிரயாணத்தைத் தொடர முடியாது. அப்படியிருக்கும் போது திடீரென்று இரண்டு கொள்ளைக்காரர்கள் குறுக்கே வந்து அந்த விவேகத்தைக் கொள்ளையடித்துக் கொணடு போய் விட்டால் என்னாவது? அப்படித் தான் சார் ஆகிவிட்டது. சரி யார் அந்த இரண்டு கொள்ளைக் காரர்கள். ஒருவரது பெயர் காமம் அதாவது ஆசை. இன்னொருவரது பெயர் குரோதம் அதாவது சினம்.

ஆசையும் சினமும் சேர்ந்துதான் நம்மிடம் உள்ள விலை உயர்ந்த பொருளான விவேகத்தைப் பறித்துக் கொணடு போய்விடுகிறது. அது மிகவும் வேதனை தரக் கூடிய ஒரு விஷயம். மெழுகுதிரியைத் தவற விட்டு விட்டு இருட்டில் தவித்துக் கொண்டிருப்பது போல. அதனால் தான் பெரியவர்கள் என்ன சொல்கின்றனர் என்றால் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமாம்.

ஆசை, சினம் இவையிரண்டும் மனதில் உண்டாகிவிட்டால் அதை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிந்து விட வேண்டுமாம். வளர விட்டால் ஆபத்து. அப்படிக் கிள்ளி எறிவதற்கு நாம் ஒரு கத்தியை உபயோகப்படுத்த வேண்டும். அந்தக் கத்திக்குப் பெயர் தான் புத்தி.

நாமெல்லாம் வழக்கமாக என்ன செய்கிறோம். முதலில் கோபப்படுகிறோம். அதன்பின் வருத்தப்படுகிறோம். இனிமேல் கோபமே படக்கூடாது என்று நினைத்துக் கொள்கிறோம் . இதே தீர்மானத்தை முன்பே எடுத்திருக்க வேண்டும் அதுதான் புத்திசாலித்தனம்.

ஆசையையும் கோபத்தையும் ஆரம்பத்திலேயே எடுத்தெறியாவிட்டால் நமது மனோசக்தி குறைந்து விடும். கடைசியில் நாம் மிருகங்களாகிவிடுவோம். இது பெரியவர்கள் நமக்குக் கொடுத்திருக்கும் எச்சரிக்கை. சிலபேர் எந்தச் சந்தர்ப்பத்திலும் கோபப்படுவதில்லை. அதைப் பார்த்துவிட்டு நாம் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது.

ஒரு பிரயாணி விமான நிலையத்தில் ஒரு பணியாளரிடம மிகவும் கோபமாக சண்டை போட்டுக் கொண்டிருந்தார். இந்தப் பிரயாணி ஜப்பான் போக வேண்டியவர். அந்தச் சிப்பந்தி பிரயாணிகள் கொண்டு வரும் பெட்டிகளை வாங்கி ஒழுங்குபடுத்தி விமானத்திற்கு அனுப்பி வைக்க வேண்டியவர். அந்தப் பிரயாணி இந்த சிப்பந்தியை வாய்க்கு வந்தபடி திட்டிக்கொண்டிருநதார். இவர் பதிலுக்குக் கோபப்பட வேண்டுமல்லவர்? படவேயில்லை. மிகவும் பொறுமையாக புன்முறுவலுடன் அவருக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தார். பார்ப்பவர்களுக்கு இது மிகவும் ஆச்சரியத்தைத் தந்தது. சிறிது நேரத்தில் விமானம் வந்தது. இந்தப் பிரயாணி கிளம்பிச் சென்று விட்டார்.

அதனபின் அந்தச் சிப்பந்தியைக் கூப்பிட்டார் ஒருவர். "அநத ஆள் உங்களை அவ்வளவு கோபமாகத் திட்டினார். உங்களால் எப்படி சிரித்துக் கொண்டே பதில் சொல்ல முடிந்தது. உங்களுக்குக் கோபமே வராதா?" என்று கேட்டார்." எனது சினத்தை நான் வெளியில் காட்டிக்கொள்ளமாட்டேன். நான் அதைக்கையாளும் விதமே தனி" என்றார் அந்த ஆள்."அது எப்படி?" என்றார் இவர். "இப்போது அந்தப் பிரயாணி ஜப்பானுக்கு போய்க கொண்டிருக்கிறார். அவரது பெட்டிபடுக்கையெல்லாம் அமெரிக்காவுக்குப் போய்க்கொண்டிருக்கிறது" என்று மிக்க நிதானமாகப் பதில் சொன்னார் அவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தமிழீழ நீதிமன்ற நடைமுறைகளே தமிழ் மக்களுக்குப் பொருத்தமுடையன

## நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா தெரிவிப்பு

(மன்னார்)

இலங்கையின் நீதிமன்ற சட்ட நடைமுறைகளை விட தமிழீழ நீதிமன்ற சட்ட நடைமுறைகளே அதிகமாக தமிழ் மக்களின் நடைமுறைப்பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடியனவாகவுள்ளன.



கடந்த காலத்தில் பெற்ற பெறுபேறுகள் இதற்குச் சான்றுபகர்கின்றன என தமிழீழ நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா. தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் மன்னார் வட்டக்கண்டல் பகுதியில் புதிதாகத் திறக்கப்பட்ட தமிழீழ நீதிமன்றத்தின் 7வது நீதிமன்ற வளாகத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துரைக்கையில்,

இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள தமிழ் மக்களின் நன்மை கருதி வட்டக்கண்டலில் தமிழ நீதிமன்றம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழீழ நீதிமன்றம் நடுநிலமையுடன் மக்களின் தேவை அறிந்து தொடர்ந்தும் உத்வேகத்துடன் செயற்படும்.

எமது மக்கள் தமது அன்றாட வாழ்க்கையை எவ்வித பிரச்சினையுமின்றி சிறந்த முறையில் வாழவேண்டும் என்பதற்காக எமது பிரதேசத்தில் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுவருகின்றன.

அநத வகையில்,சட்டத்தையும்,ஒழுங்கையும் நிலை நாட்டுகின்ற அந்தப் பாரிய பொறுப்பை எமது தேசியத்தலைவர் சட்டத்தரணிகளிடமும் நீதிபதிகளிடமும் அளித்துள்ளார் என்று தெரிவித்தார்.

(உ-121)

# பிள்ளையார் சிலை திருட்டு

(யாழ்ப்பாணம்)

பிறவுண்வீதியிலுள்ள நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் இருந்த தம்பப் பிள்ளையார் சிலையொன்றும் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதோரால் களவாடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

(உ-18)

# இராசி பலன்

**30.07.2004**

**(ஆடி 15, வெள்ளிக்கிழமை)**

**சதுர்த்தசி பி.இ.2.46மணி வரை**

**பூராடம் மாலை. 6.11 மணி வரை**

**இராகுகாலம் 10.33-12.03 மணி வரை**

**சுபநேரம் 6.03-7.33 மணிவரை**

**மேடம்**

உடல் உழைப்பு, புதிய சிந்தை, வயிற்றுக் கோளாறு, அச்சமான நிலை.

**இடபம்**

திருடர் பயம், போசன சுகம், காரிய தடங்கல், உடல் நலக்குறைவு.

**மிதுனம்**

திடீர்பயணம், அபூர்வசந்திப்பு, தனலாபம், காரிய அனுகூலம்.

**கடகம்**

பணவருவாய், சுகவாழ்வு, சத்துருஜெயம், எடுத்த கருமங்கள் கைகூடும்.

**சிங்கம்**

வியாபார நன்மை, காரிய இடையூறு, தாழ்ந்த சுபாவம், உடல் நலக்குறைவு.

**கன்னி**

கல்வியில் ஆர்வம், பயந்த சுபாவம், மாதா சுகம், தொழில்சிந்தை.

**துலாம்**

கூட்டு முயற்சி, நல்ல செய்தி, விருந்துபசாரம், இனிய சம்பவம்.

**விருச்சிகம்**

கௌரவக்குறைவு, காரிய தாமதம், ரோக நிலை, பணவிரயம்

**தனுசு**

ஆழ்ந்த சிந்தை, புதிய பொருள் சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, பிரயாணம்.

**மகரம்**

கோபப்படுதல், அதிக செலவு, நித்திரைக் குறைவு, முயற்சி தாமதம்.

**கும்பம்**

பெருமையடைதல், தெய்வசிந்தை, காரிய அனுகூலம், நண்பர்கள் சந்திப்பு.

**மீனம்**

தொழிலில் ஆர்வம், சுப நிகழ்ச்சி, பிறருக்கு உதவுதல், போசன சுகம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# கடற்படை துப்பாக்கிச் சூடு விவசாயி படுகாயம்

(கற்பிட்டி)

விமானப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் விவசாயி ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

புத்தளம் கற்பிட்டி முசல்பிட்டியில் நேற்று முன்தினம் மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி பகுதியில் உள்ள விவசாயக் காணிக்கு அண்மையாக விமானப் படையினர் துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோதே இவர் காயமடைந்துள்ளார்.

இது குறிதவறிய வெடிவிபத்து எனத் தெரிவிக்கும் புத்தளம் பொலிஸார் இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, காயமடைந்த விவசாயி கற்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக சிலாபம் வைதநியசாலைக்கு மாற்றப்பட்டிருப்பதாகவும் இவரது உடல் நிலை மிகமோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

(உ-4,64)

# வவுனியாவில் நெருப்புக் காய்ச்சல் தீவிரம்

(செட்டிக்குளம்)

வவுனியா நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் நெருப்புக் காய்ச்சல் மிகத் தீவிரமாக பரவிவருகின்றது.

உரிய முறையில் இப்பிரதேசங்களின் சுகாதார நிலைமைகள் பேணப்படாமையினாலேயே இந்நோய் பரவிவருவதாகக் கண்டறியப்பட்டதையடுத்து இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

அண்மைக்காலமாகப் பரவிவரும் இந்நெருப்புக்காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்ட பலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக வவுனியா மாவட்ட பிரதி சுகாதாரப் பணிப்பாளர் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடதென் பகுதி போக்குவரத்துக்காக மக்கள் பயன்படுத்தும் முக்கியமையமாகக் காணப்படும் வவுனியா நகரில் இந்நோய் தாக்கம் காணப்படுவதால் இதனூடாக செல்லும் பயணிகள பலரும் நெருப்புக்காய்ச்சல் தாக்கத்திற்கு இலக்காகக் கூடிய அபாயம் காணப்படுகிறது.

எனவே, வவுனியா நகரில் வீதி ஓரமாக விற்பனையாகும் உணவுப் பண்டங்களை வாங்கி உண்பதை தவிர்க்குமாறு அனைவருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (உ- 4,62)

# தேங்கிக்கிடந்த தபால் பொதிகள் துரிதமாக அனுப்பிவைக்கப்படுகின்றன

(வவுனியா)

வவுனியா தபாலகத்தில் கடந்த 11மாதங்களாகத் தேங்கிக் கிடந்த தபால் வழியாக அனுப்பப்படும் பார்சல் பொதிகளை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வவுனியா பிராந்திய தபால் அத்தியட்சகர் குமரகுரு தெரிவித்துள்ளார்.

முதல் கட்டமாக 2ஆயிரத் து 45 பார்சல் பொதிகள் தபால் திணைக்களத்திற்கு சொந்தமான வாகனங்களில் வவுனியாவில் இருந்து திருகோணமலைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும தெரிவித்த அவர் வன்னி மாவட்டத்திற்கான பார்சல் பொதிகளை நேரடியாக உரியவர்களிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (உ-60,10)

# கனடா மனிதாபிமான நிலையம் ஈ.பி.டி.பி யை சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

கனடாவின் மனிதாபிமான நிலையப் பணிப்பாளர் டேவிற் வெஸ்றாக், தேசிய சிறுபான்மை இனங்களின் பாதுகாப்பு அமைப்பின் முன்னாள் பணிப்பாளர் பேராசிரியர் ஜோன் பாக்கர், பண்டாரநாயக்க சர்வதேச கற்கை நிறுவனத்துடன் இணைந்து பணியாற்றும் டாக்டர் அலன் சீனன் ஆகியோர் ஈ.பி. டி.பியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசியுள்ளனர்.

இச்சந்திப்பில் ஈ.பி.டி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான கலாநிதி கே. விக்னேஸ்வரன், எஸ். தவராசா ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அங்கு உரையாற்றுகையில்,

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அரசியல் கட்சிகளின் சுதந்திரமான ஜனநாயக செயற்பாடுகளுக்கு மட்டுமன்றி தனி மனிதனின் அடிப்படை சுதந்திரமும் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயத்திற்கு ஈ.பி.டி.பி. ஒருபோதும் தடையாக இருக்கமாட்டாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.


(உ-60,10)

# மேற்கிந்தியக் கிரிக்கெற் 75 வயது

# ஜாம்பவான்கள் ஐவர் கௌரவிப்பு

மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெற் வரலாறு 75வருடங்களைப் பூர்த்திசெய்துள்ளதை முன்னிட்டு அதன் கிரிக்கெற் வரலாற்றில் சாதனைபடைத்த ஐந்துபேரை எக்காலத்திற்குமுரிய ஜாம்பவான்களாக


விவியன் ரிச்சர்ட்ஸ்


பிரையன் லாரா

மேற்கிந்தியக் கிரிக்கெற் சபை அறிவித்துக் கௌரவித்துள்ளது.

ஆயினும் நடுவர்குழு, 80களில் கிரிக்கெற் உலகத்தைக் கதிகலங்கவைத்த மேற்கிந்திய அணியின் அதிவேகப்பந்து வீச்சாளர்களைக் கருத்திற்கொள்ளாமல் விட்டிருப்பதையிட்டுப் பலரும் அதிருப்தியடைந்துள்ளனர்.

ஜோர்ஜ் ஹெட்ரி, சேர் கார்பீல்ட் சோபர்ஸ், சேர் விவியன் ரிச்சர்ட்ஸ், சேர் ∴பிராங் வொரல், தற்போதைய அணித்தலைவர் பிரையன் லாரா ஆகியோரை நடுவர்குழு தெரிவுசெய்துள்ளது.

பேர்மிஸ்ஹாம் சிம்பொனி மண்டபத்தில் நடைபெற்ற இவ் விழாவிற்கு மேற்கிந்தியக் கிரிக்கெற்றின் ஜாம்பவான்கள் பலரும் பிரச்சன்னமாகியிருந்தனர். புகழ்மிக்க மேற்கிந்தியக் கிரிக்கெற் போட்டிகள் இங்கு காண்பிக்கப்பட்டன.

பிரையன் லாராவுக்குப் பதில் மல்கம் மார்வுலுக்குப் பரிசு வழங்கப்பட்டிருக்க வேண்டும் எனும் அபிப்பிராயம் பரவலாக நிலவுகிறது. கேட்ரி அம்புரோஸ், மைக்கல் ஹோல்டிங் ஆகியோருக்கும் சிறப்புப்பரிசுகள் வழங்கப்பட்டன.

(யே)



நியூசிலாந்தில் நடைபெறும் ரூர் டி லா றீஜன் சைக்கிள் ஓட்டப் போட்டியின் இரண்டு சுற்றுக்களில் வெற்றிபெற்று முன்னணியில் திகழும் ஹெய்டன் றோல்ஸ்டன் அழகிகளிடமிருந்து முத்தங்களைப் பரிசாகப் பெறுவதைப் படத்தில் காணலாம்.

# ஷரபோவா அதிரடி ஆட்டம்

# அவரிடமே ரிக்கற் கேட்ட ரசிகர்கள்

விம்பிள்டன் சம்பியன் கிண்ணத்தை வென்ற மரியா ஷரேபோவா இரண்டுவாரகால இடைவெளியின் பின் அக்கியூரா கிளாசிக் போட்டிகளில் கலந்துகொண்டு அதிரடியாக ஆடினார்.



6,500பேர் நிரம்பியிருந்த அரங்கில் அமெரிக்க வீராங்கனை லில்லியா ஒஸ்ரெல்வோலை 6-3,6-3எனும் நேர்செற்களில் தோற்கடித்தார்.

"இதுதான் எனது துறை என்பதை நான் நிச்சயமாக உணருகிறேன். இந்தத்துறையில் இதே ஸ்தானத்தில் இருப்பது மிகக் கடினமானது. ஆயினும் மென்மேலும் நான் உற்சாகமடைகிறேன் என்று குறிப்பிட்ட ஷரோபோவாவிடம் விளையாட்டரங்கினுள் நுழைவதற்குப் பிரமுகர்களும் ரசிகர்களும் ரிக்கற் பெற்றுத் தருமாறு மன்றாட்டமாகக் கேட்டனர்.

என்னுடைய போட்டிகளுக்கான ரிக்கெற்றுக்கள் விற்று முடிகின்றனவென்பதில் எனக்கு மகிழ்ச்சியே, எனது விளையாட்டைப் பார்ப்பதற்கு அதிகமான ரசிகர்கள் தமது குழந்தைகளுடன் முண்டியடிப்பது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது என்று தெரிவித்தார் ஷரபோவா.


(யே)

IN ASSOCIATION WITH:

ATHENS OLYMPICS 2004

# தடி ஊன்றிப் பாய்தலில் ஜெலினா உலக சாதனை

தற்பொழுது நடைபெற்றுவரும் நோர்விச் யூனியன் சர்வதேச தடகளப் போட்டிகளில் ரஷ்யா வீராங்கனை ஜெலினா இஷின்பயேவா தடி ஊன்றிப் பாய்தலில் புதிய உலக சாதனையை ஏற்படுத்தியுள்ளார்.



4.89மீற்றர் உயரத்தைத் தனது முதலாவது முயற்சியிலேயே தாண்டி 50ஆயிரம் அமெரிக்க டொலர்களையும் பரிசாக வென்றுள்ளார். இதுவரை காலமும் அவரது ரஷ்ய சக வீராங்கனை செவற்லானாவின் 4.88மீற்றர் உயரமே உலகசாதனையாக விளங்கிவந்தது.

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் நடப்பு ஒலிம்பிக் சம்பியனான ஸ்ரேஸி ட்ரக்சில்லாவுக்கும் மேற்படி இரு உலக சாதனை வீராங்கனைகளுக்குமிடையில் கடும் போட்டி நிலவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(யே)


# விளையாட்டுச் செய்திகள்

ATHENS 2004
XXVIII OLYMPICS 13-29 AUGUST

ஒலிம்பிக்கிற்கு இன்னும் 14 தினங்கள்

# ஊக்கமருந்து பிரச்சனைகள் மௌரீஸ் கிரீனை பாதிக்காது

ஊக்கமருந்துப் பாவனையால் மிகவும் சின்னாபின்னமாகிப் போயிருக்கும் அமெரிக்க ஒலிம்பிக் தடகளப் பிரிவினரில் இன்னமும் மனம் தளராது இருப்பவர் மௌரீஸ் கிரீன்தான்.



இந்தப் பிரச்[illegible]னை என்னை [illegible]வித்த்திலும் [illegible]சைக்கவில்[illegible] ஆனால்இது [illegible]னைக் கவ[illegible] கொள்ள[illegible]து என[illegible] நேசிக்கும் இந்தத் துறை மீது அது கரும் புள்ளியை இட்டிருக்கிறது. எல்லோரையும் சந்தேகக்கண்கொண்டு பார்க்க வைத்திருக்கிறது. எல்லோரது மனநிலையையும் அது பாதிக்கிறது என்றார்.

ஆனால் இம்முறையும் 100மீற்றரில் தங்கப்பதக்கத்தை வெல்வதில் நான் உறுதியாக இருக்கிறேன். நிச்சயம் அதை என்னால் செய்ய முடியும் என்று நம்பிக்கை தெரிவித்தார் நடப்பு ஒலிம்பிக் சம்பியனான மௌரீஸ் கிரீன்.

(யே)

## எதென்சுக்கு வாருங்கள் பகுதி XII

# எதென்ஸ் ஒலிம்பிக் மைதானங்கள் ∴பலிரோ கடற்கரை அரங்கு

எதென்ஸின் ∴பலிரோ கடற்கரையில் அமைக்கப்பட்டிருக்கும் கடற்கரை அரங்கில் நான்கு விதமான விளையாட்டுக்கள் இடம்பெறவுள்ளன. மத்திய எதென்ஸிலிருந்து 10கிலோமீற்றருக்கப்பால் அமைக்கப்பட்டுள்ள இவ்வரங்கு இயற்கை அழகால் நிறைந்துள்ளது.



கைப்பந்து, வலைப்பந்து, கடற்கரை வலைப்பந்து மற்றும் ரேக்வொண்டோ ஆகிய நால்வகை விளையாட்டுக்கள் இங்கே இடம்பெறவிருக்கின்றன.

சுமார் 32ஆயிரம் பார்வையாளர்களுக்கான இருக்கை வசதிகள் செய்யப்பட்டுள்ள இந்த அரங்குகளில் 838போட்டியாளர்கள் கலந்துகொள்ளவிருக்கின்றனர். சமாதான அரங்கம் என்று பெயரிடப்பட்டுள்ள இவ்வரங்குத் தொடரில் கடற்கரை வலைப்பந்தாட்டம் ஓகஸ்ட் 14தொடக்கம் 19வரையும் இடம்பெறும். வலைப்பந்தாட்டம் ஓகஸ்ட் 14தொடக்கம் 24வரையும் நடக்கும் அதேவேளை, கைப்பந்தும் இதே திகதிகளில் இடம்பெறும் தற்காப்புக்கலைகளில் ஒன்றான ரேக்வொண்டோ ஓகஸ்ட் 26தொடக்கம் 29வரை இடம்பெறும்.

(யே)

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு

தொடர் இல 11

## வயலூர் கும்பாபிஷேகம்



வயலூரில் ராஜகோபுரம் புதுக்கியும், சக்தி தீர்த்தத்தைப் புதுப்பித்தும், தென்புறத்தில் உறையூர் திரு.ரா.ப.சாமிக்கண்ணுபிள்ளையின் உபயமாகச் சிறிய கோபுரம் அமைத்தும், திருச்சிராப்பள்ளி திருமதி அமிர்தம்பாள் உபயமாக நூதன அருணகிரிநாதர் பிரதிஷ்டையும் 1936ஆம் ஆண்டு நடைபெற்றன. அப்பொழுது என்னுடைய தந்தையார் வந்து விரிவுரை செய்து சிறப்பித்தார். மகாகும்பாபிஷேகம் மிகவும் நன்றாக நடைபெற்றது. மக்கள் கூட்டம் கடல்போல் வந்து திரண்டு நின்று தரிசித்தார்கள். வயலூரின் பெருமை எங்கும் பரவியது. உறையூர் அன்பர் திரு பி.வி.ஜே.முனிசாமிச்செட்டியார் வரவு செலவு அறிக்கையை அச்சிட்டு வழங்கினார்.

## பலி விலக்கு

திருநெல்வேலி பாளையங்கோட்டையில் ஆயிரத்தம்மனுக்கு பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறை ஒரு லட்சம் மக்கள் கூட்டத்திற்கு முன் ஒரு எருமைக்கடாவை நிறுத்தி ஒரேவெட்டில் வெட்டி அறுத்து பலியிடுவது வழக்கமாக இருந்தது. அவ்வாறு வெட்டியவனுக்குத் தங்கத் தோடா பரிசு கொடுப்பார்களாம். இதனை நிறுத்த வேண்டுமென்று முயன்றவர்களுக்குக் கல்லெறி பரிசு கிடைத்ததாம். வயலூர் கும்பாபிஷேகம் முடிந்தவுடன் என்னை அங்கு வருமாறு தந்தி வந்தது.

திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தார்ந்த நூற்பதிப்புக் கழக அமைச்சரும். மறைமலை அடிகளின் மாப்பிள்ளையுமாகிய திரு.வ.திருவரங்கம்பிள்ளை அவர்கள் தெய்வத்தின் பெயரால் பலியிடும் இந்தக் கொடுமையை நிறுத்த வேண்டுமென்று பெரிதும் முயன்றார். இதன் பொருட்டு பாளையங்கோட்டை பெருமாள் கோயிலுக்கு முன் பன்னிரண்டு நாள் நான் விரிவுரை செய்தேன். பலியினால் வரும் தீமையையும், அதனால் வரும் பாவத்தையும் ஒவ்வொரு நாளும் எடுத்து மக்களுக்கு விளக்கிக் கூறினேன். பலியிடும் குழுவினர்கள் வாரியாரையும் சேர்த்து வெட்டப் போகிறோம் என்று கர்ஜித்தார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவரின் மனைவி தினந்தோறும் என் விரிவுரையைக் கேட்டு உள்ளம் உருகினார்.

பலியிடும் விழாவுக்கு முதல்நாள் நாங்கள் கலெக்டரிடம் போய் பலியை நிறுத்த வேண்டுமென்று முறையிட்டோம். கலெக்டர் நாங்கள் சமயத் துறையில் தலையிட சட்டம் இடந்தரவில்லை என்றார். அப்பொழுது அங்கிருந்த காவல்துறை அதிகாரி "வாரியாரையும் சேர்த்து வெட்டுகிறோம் என்று கூறுகிறார்களாம். இப்படி ஒரு கலகம் நிகழுமானால் கலகத்தை அடக்குவது அரசாங்கத்தின் கடமை" என்று கூறினார். கலெக்டர் "கலகம் முற்றிவிட்டால் என்ன செய்வது?" என்றார். "இதை அடக்கவில்லையானால் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு என்னதான் பெருமையுண்டு?" என்று கூறினார். கலெக்டர் மனைவியும் "வாரியார் கண்ணீர் விட்டு கதறி அழுகிறார். அவரது கண்ணீரைத் துடைப்பது நமது கடமை" என்று பரிந்துரை கூறினார். கலெக்டருக்கு ஊக்கம் பிறந்தது. நன்றாகப் பாதுகாவல் தரவேண்டுமென்று காவல்துறை அதிகாரிக்குக் கட்டளையிட்டார். நாங்கள் காந்தியடிகளுக்கு "தெய்வத்திற்கு முன் பலியிடுவது பற்றித் தங்கள் கருத்து யாது?" என்று எழுதிக் கேட்டோம்.

காந்தியடிகள் "கடவுள் பெயரால் பலியிடுவது காட்டு மிராண்டித்தனத்தின் கையிருப்பு" என்று தந்தி மூலம் பதில் அனுப்பினார்.

விழாவை நடத்தக் கூடாதென்று கலெக்டர் 144 உத்தரவு பிறப்பித்தார். மூன்று மைல் சுற்றளவில் 4பேர் கூடி நிற்கக் கூடாதென்று கட்டளை இட்டார். பலியிடுகின்ற குழுவினர் நன்றாகக் குடித்துவிட்டு மஞ்சள் துணி உடுத்துக் கொண்டு மாலையில் இடுகின்ற பலியைக் காலையிலேயே செய்து விடுவோம் என்று துள்ளித்துடித்து நின்றார்கள்.

பொலிஸ் அதிகாரிகள் புலிபோல் பாய்ந்து பலியிடுகின்ற குழுவினரின் கையில் விலங்கிட்டு லொறியில் ஏற்றிக் கொண்டு எங்கேயோ கொண்டு போய் விட்டார்கள். கலெக்டர் அந்த விழாவை எங்களை நடத்துமாறு வேண்டிக் கொண்டார்.

மாலை அந்த எருமைக் கடாவிற்கு மலர் மாலையிட்டு அலங்கரித்து, அதை முன்னே நடக்கவிட்டு நான் திருப்புகழ் பஜனை செய்து கொண்டு ஊர்வலமாகச் சென்றேன். பல்லாயிரக்கணக்கான மக்கள் பஜனையில் கலந்து கொண்டார்கள். அந்த எருமைக்கு உயிர்பிச்சை அளிக்கப் பெற்றது. அம்மன் விழாவை நாங்களே செய்தோம்.

பலி கொடுக்கும மேடையில் நீற்றுப் பூசணிக்காய் வைத்து வெட்டி பலியிடப்பட்டது. இது மிகமிகப் பெரிய சாதனை என்று எல்லோரும் புகழ்ந்து பாராட்டினார்கள்.

## கனவில் அருணகிரிநாதர் கருணை செய்தது

வயலூரில் இராஜகோபுரத் திருப்பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்பொழுது அடிக்கடி தொழிலாளர்களுக்குப் பணம் கொடுக்க, நானும் பி.வி.யே.முனிசாமிச்செட்டியாரும் வயலூருக்குப் போய்வருவோம், ஒருமுறை வயலூரிலேயே ஓர் இரவு தங்க நேர்ந்தது.

செட்டியாரும், நானும் கோயிலில் படுத்துக்கொண்டோம். நான் ஒவ்வொரு நாளும் படுத்துக் கொள்ளும் பொழுது 'முருகன் கனவில் வந்து கருணை புரியவில்லையே' என்று எண்ணி ஏங்குவது உண்டு. இளம் பருவத்தில் திருவண்ணாமலைக்குப்போனால் அருணகிரிநாதர் படத்தை வாங்கி வந்து சில அன்பர்களிடத்தில் கொடுத்து அருணகிரிநாதரை வழிபடச் சொல்லுவேன். அருணகிரிநாதரிடத்தில் அளவில்லாத ஈடுபாடு உண்டு.

அருணகிரிநாதர் என்றாவது ஒருநாள் பன்னிருகைப் பரமனிடம் நம்மைப்பற்றிப் பரிந்துரை கூறுவார். அப்பரமபதி நமக்குக் கருணை புரிவார் என்ற அசையாத நம்பிக்கை உண்டு. அன்று விடியற்காலை 5 மணியிருக்கும் ஒரு இனிய கனவு தோன்றியது. அக்கனவு பசுமையாக இன்றும் நெஞ்சில் நின்று நிலவுகின்றது.

நான் காங்கேய நல்லூர் முருகன் கோயிலில் வழிபாடு செய்து கொண்டிருந்தேன். அங்கு தெற்கு நோக்கிப் பிரதிஷ்டை செய்திருந்த அருணகிரிநாதர் சிலாமூர்த்தியின் திருமுன் நின்று கரத்தைக் கூப்பி வணங்கி நின்றேன். அத்திரு உருவம் முன்பக்கமாகச் சாய்ந்திருந்தது. "இப்பொழுது தானே கும்பாபிஷேகம் நடந்தது! அஷ்டபந்தன மருந்து சரியாகச் சாத்தவில்லையோ! சுவாமி சாய்ந்திருக்கிறாரே!" என்று எண்ணி வருந்தினேன்.

அத்திருவுருவம் நிமிர்ந்து நின்றது. காவி உடை உடுத்திய சந்நியாசி போல் காட்சி அளித்தது. அருணகிரிநாதர் என்னை அருகில் வருமாறு கை அசைத்து அழைத்தார். நான் அருகில் சென்று கும்பிட்டு நின்றேன். அருணகிரிநாதர் என்னைப் பார்த்து "அப்பா! எனக்கு மிகுந்த பசியாக இருக்கின்றது. சிறிது அன்னம் கொடு" என்று கேட்டார். நான் திரும்பிப் பார்த்தேன். என்னுடைய தம்பி திருமாமண்ணாளசிவம் அங்கு நின்று கொண்டிருந்தான்.

"தம்பி! அருணகிரிநாதருக்குப் பசி அதிகமாக இருக்கிறதாம். நீ வீட்டிற்குச் சென்று அம்மாவிடம் சொல்லி அன்னம் வாங்கிவா" என்று கூறினேன். அவன் வீட்டிற்குப் போய்த் திரும்பி வந்து "இப்பொழுது மாலை 3 மணி; அகாலமாகிவிட்டபடியால் அன்னம் இல்லையாம்" என்று கூறினான். நான் அருணகிரிநாதரைப் பார்த்து "சுவாமி! இப்பொழுது அன்னம் இல்லையாம்" என்று பணிவுடன் பகர்ந்தேன்.

(தொடரும்)

காணாமல் போனவர்களின்

# எலும்புக் கூடுகளை ச.செ.ச. பார்வையிட்டது

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் படையினர் நிலைகொண்டிருந்த காலப்பகுதியில் தமது வீடுகளைப் பார்வையிடச் சென்ற 180க்கும் மேற்பட்ட பொதுமக்கள் காணாமல் போயிருந்தனர்.

இவ்வாறு காணாமல் போனவர்களுடையதெனக் கருதப்படும் எலும்புக்கூடுகள் புலிகளால் மீட்கப்பட்டு கிளிநொச்சியில் தமிழீழ காவல் பணிமனையில் பாதுகாக்கக்கப்பட்டு வருகின்றன.

இந்த எலும்புக்கூடுகளை நேற்று முன்தினம் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினர் பார்வையிட்டனர்.

இந்த எலும்புக் கூடுகளைப பாதுகாப்பதில் உள்ள பிரச்சினைகள் குறித்தும் இதன் போது ஆராயப்பட்டது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தடை அறியும் நிபுணர் மொறின் மலாவி, பிரதிநிதி கமீலி மற்றும் தமிழீழ காவல்துறையின் பிரதம பரிசோதகர் ரஞ்சித்குமார், உப பரிசோதகர் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

(உ-08)

## பெற்றோல் விலை உயர்வால் மீனவர்கள் பாதிப்பு

(கொழும்பு)

பெற்றோலின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதால் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குவதாக மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டி வருகின்றனர்

பெற்றோலின் விலை அதிகரித்துள்ளதால் சாதாரண பொதுமக்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்க மாட்டார்கள் என அரசு கூறிவருவதை தாம் முழுமையாக எதிர்ப்பதாகவும் மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் கூறியுள்ளனர்.

கரையோரப் பிரதேசங்களில் வாழும் மீனவர்களில் பலர் மீன்களை விற்பனை செய்வதற்காக மோட்டார் வாகனம் மூலமே நகரங்களுக்கு மீன்களைக் கொண்டு செல்வதால் மீனின் விலை மேலும் அதிகரிகும் எனவும் அவர்கள் தெரிவிக்கினறார்கள்.(உ-61,10)

## நேற்று வெளியான தமிழ்மொழி இலக்கியம் வினாத்தாள் பகுதி I இற்கான விடைகள்

### பகுதி I விடைகள்

| வினா | விடை | வினா | விடை |
|---|---|---|---|
| 1. | (1) | 21. | (1) |
| 2. | (3) | 22. | (3) |
| 3 | (1) | 23. | (2) |
| 4. | (3) | 24. | (4) |
| 5. | (2) | 25. | (2) |
| 6. | (4) | 26. | (2) |
| 7. | (1) | 27. | (4) |
| 8. | (4) | 28. | (4) |
| 9. | (4) | 29. | (3) |
| 10. | (2) | 30. | (2) |
| 11. | (1) | 31. | (2) |
| 12. | (2) | 32. | (3) |
| 13. | (1) | 33. | (4) |
| 14. | (2) | 34. | (2) |
| 15. | (3) | 35. | (4) |
| 16. | (1) | 36. | (1) |
| 17. | (3) | 37. | (3) |
| 18. | (1) | 38. | (4) |
| 19. | (4) | 39. | (4) |
| 20. | (3) | 40. | (2) |


யாழ்ப்பாணம்

தேசிய கல்வியியற் கல்லூரி கோப்பாய்

இணைக்கப்பட்ட ஆசிரிய கல்வியியலாளர் பதவி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆங்கிலம், சித்திரம், விசேடகல்வி ஆகிய பாடநெறிகளல் உள்ள இணைக்கப்பட்ட விரிவுரையாளர் பதவி வெற்றிடங்களுக்கு நியமிப்பதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் உரிய விண்ணப்பப் படிவங்களை நேரில், அல்லது ரூபா 4.50 முத்திரை ஒட்டப்பட்ட 9" x 4" அளவுடைய சுயமுகவரி எழுதப்பட்ட கடித உறையை தபாலில் "பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய" என்னும் முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக 15.08.2004 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்" என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

பீடாதிபதி,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

(C/386)



க.பொ.த (சா/த)
மாணவர்களே! வலம்புரியில்
தொடர்ந்து பயிற்சி
வினாத்தாள்கள்
வெளிவருகின்றன.

# கல்விப் பொதுத் தராதர (சா/த) மாதிரிப் பரீட்சை - 2004

## General Certificate of Examination (Ord. Level) Model Examination - 2004

தமிழ்மொழியும் இலக்கியமும் II

ஆக்கம் :
திருமதி. த. சுவாமிநாதன் (ஆசிரியை)
ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரி,
புத்தூர்.

மணி - 2

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**1. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250-300 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக.**

(அ) விஞ்ஞான வளர்ச்சியினால் இன்று உலகம் சுருங்கி வருகிறது. நாம் பல மைல்களுக்கப்பால் இருப்போருடன் பார்த்துப்பேசித் தகவல்களை பரிமாறிக் கொள்கிறோம். பல மைல்களுக்கு அப்பால் உள்ள நூலகத்தில் உள்ள புத்தகங்களையும், ஏன் அறுவைச் சிகிச்சைகளையும் கூடப் பார்க்குமளவிற்கு விஞ்ஞானம் உதவுகின்றது என்பதைக் கருத்தில் கொண்டு "தகவற் தொடர்ப்புச் சாதனங்களின் வளர்ச்சியும் பங்களிப்பும்" என்பது பற்றி ஒரு விளக்கக் கட்டுரை வரைக.

(ஆ) புலப்பெயர்வும் சமுதாய சீரழிவும் என்பது பற்றி ஒரு விபரக் கட்டுரை வரைக.

(இ) இன்று வேலைவாய்ப்புப் பெறுவதற்கு எமது கல்வித் திட்டம் குறைபாடாக உ்ள்ளது. எனவே எமது நாட்டுக்குப் பொருத்தமான கல்வித்திட்டம் அவசியம் என்பது தொடர்பாக உமது நண்பருக்கும் உமக்கும் இடையில் இடம்பெறும் உரையாடல் ஒன்றை எழுதுக.

(ஈ) "அந்நிய மோகமும் உறவுகள் புறக்கணிப்பும்" என்ற பொருள்பட ஒரு சிறுகதை வரைக.

(35 புள்ளிகள்)

**2.**

**பின்வரும் பந்திகளை சுருக்கி 15-20 சொற்களில் அமையுமாறு எழுதுக.**

(i) ஒரு நாட்டின் அரசு சீருறவேண்டுமாயின் மக்கட் சமுதாயத்தில் உண்டாகுங் குறைகளைக் களைதல் வேண்டும். அக்குறைகளைக் களைய வேண்டுமாயின் முறை வேண்டினாரையும் தக்கவாறு ஆராய்ந்து நீதிமன்றங்களிலே நீதி செலுத்தப்பட வேண்டும். அந்நீதியினாலே இரண்டு காரியங்கள் ஒருங்கே சித்தியாக வேண்டும். ஒன்று குற்றங்களுக்குத் தண்டனை விதித்தல். மற்றொன்று அந்த நீதியினாலே அவன் மீண்டும் அக்குற்றத்தை செய்யாதிருக்குமாறு காத்தல். நீதி வழங்குவதிலே தாமதம் ஏற்பட்டால் இவை இரண்டும் ஒருங்கே சிந்திக்கமாட்டா. எனவே நீதி வழங்குதல் பயனில்லாமற் போய்விடுகின்றது.

(ii) தமிழ்ச் சிறுகதைகளின் வளர்ச்சியினை "விடுதலைக்கு முன்", "விடுதலைக்குப் பின்" என்ற இரு காலப் பகுதிகளாகப் பிரித்து ஆராய்வது பயனளிக்கும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்திலும் தமிழ்ச் சிறுகதை தோன்றுவதற்குரிய சூழ்நிலை அமைந்தது. தாகூரின் சிறுகதைகள் சிலவற்றைப் பாரதியார் மொழி பெயர்த்தாலும் ஏறக்குறைய அவர் காலத்திலே வாழ்ந்த வ.வெ.சு.ஐயரே தமிழ்ச் சிறுகதைகளின் தந்தை என்ற நிலையிற் போற்றப்படுகின்றார். "கதைகள், கவிதை நிரம்பியனவாய் ரஸாபாவோ பேதமாய் இருக்கவேண்டும் என்பது என் அபிப்பிராயம்" என்று சிறுகதையைப் பற்றி தம் கருத்தை வெளியிட்டவர் அவர்.

(iii) சொல்லாவது யாது? பொருளை அறிவிக்கும் ஆற்றலையுடைய எழுத்தொலியே சொல்லெனப்படும். இருதிணைப் பாற்பொருளையுந் தன்னையுந் மூவகையிடத்தும் வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே என்று நன்னூலாருங் கூறுவர். பொருள்களைப் புலப்பட விளக்கம் பெருமை நோக்கி வடநூலார் சிலர் சொல் என்பதையும் ஒரு சோதி என்பர். சொல்லெனப்படும் சோதி தோன்றாதாயின் எல்லை நீர் ஞாலத்தில் எப்பொருள் தான் புலப்படும்.

(10 x 3 = 30 புள்ளிகள்)

**3.**

**பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து 100 சொற்களுக்குக் குறையாமல் கடிதம் வரைக.**

(அ) விவசாய குடியேற்ற நிலமொன்று வேண்டி, உதவி அரச அதிபருக்கு ஒரு விண்ணப்பக் கடிதம்.

(ஆ) உயர்தரக் கல்விகற்க வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றுக்குச் சென்ற உமது நண்பர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

(இ) உமது அயல்பகுதியில் குவிக்கப்பட்டிருக்கும் குப்பை கூழங்களினால் துர்நாற்றம் வீசுகின்றது. அதைப்பற்றி மாநகர சபையினருக்குக் ஒரு கடிதம் வரைக.

(15 புள்ளிகள்)

## தமிழ் மொழியும் இலக்கியமும் III

**பின்வரும் சந்தர்ப்பங்களை எழுதுக.**

**1.**

அ) "கோபம் பசியை ஆத்தாதுடா தம்பி! நீயென்ன செய்வா ஒனக்கு தெரிஞ்சது அவ்வளவு தான்"
(i) இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
(ii) யாருக்குக் கூறப்பட்டது?
(iii) இக்கூற்று இடம்பெற்ற கதையின் பெயர் யாது?
(iv) கோவம் பசிய ஆத்தாது எனக் கூறக் காரணம் யாது?

ஆ) "பெருகுமித்துயநனக் குற்ற வெற்றியென்
திருகலில் சிந்தையாய் செப்பு கென்றனன்"
(i) இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
(ii) யாருக்குக் கூறப்பட்டது?
(iii) இக்கூற்று இடம்பெற்ற நூலை தமிழில் எழுதியவர் யார்?
(iv) இக்கதையில் வரும் கதாபாத்திரங்கள் எவை?

இ) "நீ சமயவாதிகளுடைய கொள்கைகளை அறிய வேண்டும். உன் இளமைக் கோலம் இருந்தால் பிறர் உனக்குச் சமய உண்மைகளைச் சொல்லார்"
(i) யாரால் கூறப்பட்டது?
(ii) யாருக்குக் கூறப்பட்டது?
(iii) இங்கு உபதேசிக்கப்பட்ட மந்திரங்கள் எவை?
(iv) ஐம்பெரும் காப்பியங்களும் எவை?

ஈ) புயத்துறை வலியரேனும்
பொறையொடும் பொருந்தி வாழ்தல்
சயத்துறை, அறனும் அஃதே
என்று இவை சமையச் சொன்னான்
(i) யாரால் கூறப்பட்டது?
(ii) யாருக்குக் கூறப்பட்டது?
(iii) கூறப்பட்ட சந்தர்ப்பம் யாது?
(iv) இதன் பொருள் யாது?

(20 புள்ளிகள்)

**2. பன்வரும் செய்யுள்களின் பொருளை இக்கால உரைநடையில் எழுதி, அவை ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்துக்களில் உள்ள தொடர்களின் சிறப்புக்களை விளக்கி எழுதுக.**

(அ) **செல்வம் மேவிய நாளில் இச் செயல் செய்வதன்றியும் மெய்யினால்**
அல்லல் நல்குர வான போதிலும் வல்லர் என்றறி விக்கவே
மல்லல் நீடிய செல்வம் மெல்ல மறைந்து நாள் தொறும் மாறி வந்
தொல்லை யில் வறுமை தம்புக உன்னினார் தில்லை மன்னினார்

(ஆ) பந்தமே யிட்ட வாயும் பாவமேயேட்ட நெஞ்சுந்
தந்தமே யிட்ட வொட்டந் தழலதே யிட்ட கண்கள்
**கந்தமே யிட்ட மற்றோன் கலுவதே யிட்ட துண்ட**
**மிந்த மேற் குறிப்பல்லாது** வேறியாக் கயவரே

(இ) பண்டு முனைப்தரிசியே ஆனாலும்
**விண்டுழி போனால் முனையாதாம்** - கொண்டபேர்
ஆற்றல் உடையார்க்கு மகா தளவின்றி
ஏற்ற கருமம் செயல்

(ஈ) எயில் கடந்து எரிய நோக்கும்
அரைக்கரைக் கடக்க ஆழித்
துயில் கடந்து அயோத்தி வந்தான்
சொற் கடவாத தூதன்
**வெயில் கடந்திலாத காவல்**
**மேருவின் மேலும் நீண்ட**
எயில் கடந்த இலங்கை எய்தி
அரக்கனது இருக்கை புக்கான்

(உ) பொருளிலார்கிலை இவ்வுலகென்ற நம்
புலவர் தம்மொழி பொய்ம் மொழியன்று கான்
பொருளிலார்க்கு இன்பமில்லை துணையுமில்லை
**பொழுதெலாம் இடர்வெள்ளம் வந்தெற்றுமால்**
**பொருளிலார் பொருள் செய்தல் முதற் கடன்**

(20 புள்ளிகள்)

**3. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விடை தருக.**

(அ) உவமைநயம் என்ற பாடத்தை அடிப்படையாகக் கொண்டு கம்பர் இராமன் சானகியோடும் இலக்குவனோடும் காட்டில் நடந்து செல்லுகின்ற காட்சியை வர்ணிக்கிறார் என்பதை விளக்குக.

(ஆ) முதுமை உருவில் வந்த அறிவுடை நம்பியின் உருவத்தைப் பார்த்து பூங்குன்றனாரும் இளநாகனாரும் எண்ணியவை யாவை?

(இ) மணிமேகலைக்கு முற்பிறப்பு வரலாற்றைக் கூறிய தெய்வம் யாது? அது கூறிய வரலாறு யாது?

(10 புள்ளிகள்)

**எவையேனும் இருவினாக்களுக்கு விடை தருக.**

4. இராவணன் ஒரு கோழை. இனிப்போர் செய்ய வரமாட்டான் என இராமன் எவ்வகை நியாயங்களை எடுத்துரைப்பதாக அங்கதன் கூறுகிறான் என்பதை விபரிக்குக.
5. பொன்னம்மாவின் இறுதி ஆசைகள் நிறைவேறாமற் போனமை பற்றி முடியாத கதைகள் ஊடாக விபரிக்க.
6. ஏழைகள் வடிக்கும் கண்ணீர் செல்வச் செருக்குடைய வல்லரசை அழித்துவிடும் என்பதை விளக்குக.

(15 x 2 = 30 புள்ளிகள்)

**திங்கட்கிழமை கணித வினாத்தாள் பகுதி -I வெளிவரும்.**

**சிறுவிளம்பரம்**

**வீடு வாடகைக்கு உண்டு**

சகல வசதிகளுடன் கூடிய வீடு பொஸ்கோ பாடசாலைக்கும் கச்சேரிக்கும் அண்மையில் உள்ளது. வெளிநாட்டு நிறுவனங்களுக்கு உகந்த வீடு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: திருநாவுக்கரசு, றக்கா லேன, சுண்டுக்குளி.

(8699)

## பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வி நிறுவக கல்வி டிப்ளோமாவிற்கான பகுதி II பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 28,29 ஆம் திகதிகளில் நடைபெறுமென யாழ்ப்பாணம் தேசிய கல்வி நிறுவக இணைப்பாளர் திருமதி வில்வநாதன் அறிவித்துள்ளார்.(உ-18)

# தமிழர்களுக்கு இழைத்த கொடுமைகளின் பலாபலனை சிங்களவர் அனுபவிக்கின்றனர்

## சிங்கள ஊடகவியலாளர் கருத்து

(கொழும்பு)

சிங்கள இனவாதிகளின் மிக மோசமான இனத்துவேச ஊடகங்களிலொன்று, முதற்தடவையாகத் தமிழருக்கு சிங்கள இனம் இழைத்த அநீதிகளைக் கோடிட்டுக்காட்டி, அதற்கான தண்டனைகளை சிங்கள இனம் தற்போது அனுபவித்து வருவதாகச் சுட்டிக்காட்டியுள்ளது.

"வரலாறு தரும் தண்டனை" என்ற தலைப்பின் கீழ் பிரபல சிங்கள இனவாத ஊடகவியலாளரான ரீ.குணசேகரா எழுதியுள்ள கட்டுரையில் இலங்கையில் வாழும் தமிழினத்திற்கெதிராக சிங்கள அரசும் மக்களும் நடாத்திய மிகக் கொடூரமான தாக்குதல்களாலும் இன அழிப்பினாலும், தமிழினம் தாங்கொணாத் துன்பங்களை அனுபவிக்க நேர்ந்துள்ளதுடன், எந்தக் காரணமுமின்றி பல ஆயிரம் உயிர்கள் துடிதுடித்து இறக்கவும் தாங்கள் காரணமாக இருந்ததை சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் மக்கள் இம் மண்ணில் வாழ்வதற்கான உரிமையையே நாம தட்டிப் பறிக்க முயன்றதால் தான் சிங்கள இனம் இப்போது அதற்கான தண்டனையை அனுபவித்து வருகிறது. 21வருடங்களுக்கு முன்னர் சிங்கள இனம் எவ்வளவு முட்டாள் தனமாக செயற்பட்டதோ அதே முட்டாள் தனத்துடன் இப்போதும் செயற்படமுனைவது மிகவும் கலைக்குரியயது.

சிங்கள இனம ஒரு கொலைகார வெறிகொண்ட இனமாக வாழ்ந்திருப்பதை இப்போதாவது புரிந்துகொள்ள வேண்டிய தேவை எழுந்துள்ளது. வடக்கிலுள்ள படைத்தரபபின் பாதுகாப்புக் குறித்துக் கவலையடைந்த காலம் போய், இலங்கையின் எந்தப் பகுதியிலும் மக்கள் வாழ்வதற்கு ஆபத்து நிலவுகிறது.

உரிமை பெற்றுத் தருவதாகப் பொய் கூறியே சிங்கள இனத்தை ஏமாற்றிய சிங்கள அரசுகள் எல்லாம் எம்மிடம் இருந்த அனைத்து உரிமைகளையும் பறித்தெடுத்து, இப்போது எந்த உரிமையுமற்ற முட்டாள் சிங்கள இனமாக எம்மை உருமாற்றியிருக்கிறார்கள்.

இதற்கு மாறாக அப்போது அடக்கி ஒடுக்கப்பட்ட தமிழினம் இப்போது தலைநிமிர்ந்து துணிவுடன் நிற்கிறது.

இதற்கு விடுதலைப்புலிகளின் தலைமையே முக்கிய காரணம். இடையிலே தமிழினத் துரோகிகள் அவ்வப்போது கிளர்ந்தெழுந்து வந்தபோதெல்லாம். சிங்களத் தலைமைகள் அவர்களை சரியாகப் பயன்படுத்தவும் பதுகாப்பு வழங்கவும் தவறிவிட்டார்கள். டக்ளஸ் தேவானநதா, ஆனந்தசங்கரி, கருணா உட்பட பலரை சிங்கள அரசு சரியாகப் பயன்படுத்தத் தவறிவிட்டது என்று கண்டித்துள்ளார்.

இதுவரை காலமும் பலவித இனத்துவேசக் கட்டுரைகளையும் கோசங்களையும் எழுப்பி வந்த இந்த சிங்கள எழுத்தாளர், சிங்கள மக்களிடம் இனத்துவேசத்தைத் தூண்டும் விதத்தில் உண்மைக்குப் புறம்பான பல செய்திகளையும எழுதிவருபவர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

(உ-121)

# அடுத்த மாதம் முடிவடைவதற்குள் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு

## நிதி அமைச்சர் அறிவிப்பு

அரசாங்க வேலையில் நியமனங்கள் வழங்குவதறகான விதிமுறைகளை மீறாதவகையில் வேலை இல்லாத பட்டதாரிகள் அனைவருக்கும் அடுத்த மாதம் முடிவடைவதற்குள் நியமனங்கள் வழங்கப்படவுளளதாகவும் இதன் முதல் கட்டமாக அடுத்தமாதம் 2ஆம் திகதி திங்கட்கிழமை 17ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படவுள்ளதாகவும் நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வழங்குவதற்கான நிதி ஒதுக்கீடுகளை அரசாங்கம் ஏற்கனவே பூர்த்திசெய்துள்ளது.

இவ் வேலையற்ற பட்டதாரிகளுககு இரண்டுவருட பயிறசி வழங்கப்பட்ட பின் அவர்கள் சேவையில் சேர்ந்துக்கொள்ளப்படவுள்ளனர். இவர்களுக்கு வேதனமாக மாதாந்தம் 6ஆயிரம் ரூபா வழங்கப்படும் எனவும் நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம, தெரிவித்தார். (ம)

# ஆட்கொணர்வு மனுக்கள் மீதான விசாரணை மீண்டும் ஒத்திவைப்பு


(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் 1996,1997ம் ஆண்டு காலப்பகுதிகளில் கைது செய்யப்பட்டு காணாமல் போனமை தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்கொணர்வு மனுக்களில 6 நேற்று முன்தினம் யாழ்.மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுக்கப்பட்டன.

இவற்றின் முக்கிய எதிராளியாகக குறிப்பிடப்பட்டுள்ள கிருஷாந்தி கொலைவழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் ராஜபக்ஷவுக்கு சட்டத்தரணி ஒருவரை ஏற்பாடு செய்வதற்காக மீணடும் சந்தர்ப்பம் வழங்கி எதிர்வரும 4ஆம் திகதிவரை அவரை யாழ். சிறைசசாலையில் தடுப்புக்காவலில் வைக்குமாறு யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதிக்கு கே.பி.எஸ். வரதராஜா உத்தரவிட்டார்.

இவருக்காக நீதி மன்றத்தில் வாதாடுவதற்கு சட்டத்தரணி ஒருவரை ஒழுங்கு செய்வதற்குக் கடநத வழக்குத் தவணையின்போது கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

எனினும் இம்முறையும் சட்டத்தரணி எவரும் இவரது சாபில் நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தினால் எதிர்வரும் 4ஆம் திகதி வரை இரண்டாவது தடவையாக கால அவகாசம் வழங்கி வழககு விசாரணை எதிர்வரும் 6ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.(த-19,05)



புன்னாலைக்கட்டுவன் வடக்கு பாரதி முன்பள்ளி விளையாட்டுவிழாவில் பா.உ. எஸ்.சிவநேசன் உரையாற்றுவதையும் நிலையத்தலைவர் க.மெய்யழகன் பரிசு வழங்குவதையும் காணலாம். வலி.தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் இ.அரிகரனும் படத்தில் காணப்படுகிறார்.



யாழ்.மேல் நீதிமன்றத்திற்கு ராஜபக்ஷ அழைத்து வரப்படுகிறார்.

# குடாநாட்டு படை வீரர்களுக்கு மனித உரிமைபேணல் பயிற்சி

(கொழும்பு)

அடிப்படை மனித உரிமைகளைப் பேணுவது தொடர்பான பயிற்சியை முடித்துள்ள 30 படைவீரர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் பாதுகாப்புப் படையினர் மத்தியில் மனித உரிமைகளைப் பேணுவது தொடர்பான விழிப்புணர்வூட்டல் பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தவகையில் யாழ்பாண மாவட்டத்தில் நிலைகொண்டுள்ள 51-2 வது படைப்பிரிவைச்சோந்த 30 இராணுவத்தினருக்கே இந்த சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன. (உ-121)

# பவளவிழாவும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் பவளவிழாவும் நிறுவுநர்தினப் பரிசளிப்பு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை மு.ப.9.30 மணிக்கு கல்லூரி அதிபர் ச.சிவநேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், முதன்மை விருந்தினராக மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் வீ.இராசையாவும் சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன், யாழ்.வலயக்கல்விப் பணிபபாளா ப.விக்கினேஸ்வரன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம், தமிழீழக் கல்விக்கழகத்தைச்சேர்ந்த அருண் மாஸ்டர், பொறியியலாளர் வி.ஈஸ்வரகுமார் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

**அன்பு மாணவர்களே!**

தரம் 5 புலமைப்பரிசில் விசேட மாதிரிப் பரீட்சை வினாத்தாள்கள்


ஆகஸ்ட் மாதம் 2,3,9,11,13ஆம் திகதிகளில் வலம்புரியில் வெளிவர இருக்கின்றன.

# இறைவன் நம் எஜமான்

## வெள்ளி நற்சிந்தனை

### அபிநவ வித்யா சுவாமிகள்

உலகத்தில் நம் எல்லோருக்கும், ஒரு எஜமான், அல்லது முத



லாளி, அல்லது மேலதிகாரி இருக்கின்றார். அவர்களுக்கு நாம் சேவை செய்கின்ற நிர்ப்பந்தம் உள்ளது. உலகவியல் நியதிப்படி இப்படிப் பணி அல்லது சேவை செய்யும் போது, என்ன பிரச்சினைகள் ஏற்படுகின்றன? என்பதைப் பற்றி பத்ருஹரி என்ற கவி குறிப்பிடுகிறார்.

**மௌனான் மூக : ப்ரவசன பதுஸ்சாதுலோ ஜல்ப்கோவா த்ருஷ்ட பார்ஸ்வே ச வஸந்தூரதோப்ய ப்ரகல்ப சாந்த்யா பீருர்யதி ந லஹதே ப்ராயசோ நாபிஜாதஹ ஸேவாதர்ம பரம கஹனோ யோகினமப்ய கம்ய :**

அமைதியாக எதுவும் பேசாமல் சேவை செய்பவனை ஊமை என்று சொல்லிவிடுகிறார்கள். அவன் நன்றாகப் பேசத் தெரிந்தவன் என்றால், வாயாடி, அதிகப் பிரசங்கி என்று சொல்வார்கள், மிக அருகில் நின்று சேவை செய்தால் மரியாதை தெரியாதவன் என்பார்கள், தள்ளி நின்று பணி செய்தால், வெட்கப்படுகிறவுன் என்று கருதுவார்கள், மிகவும் பொறுமைசாலியாக இருந்தால், சோம்பேறி என்று கூறிவிடுவார்கள். எதையும் பொறுத்துக்கொள்ள முடியாமல், எதிர்த்தால், அவன் முரடன் அல்லது நாகரீகமில்லாதவன் என்று ஏசுவார்கள். எனவே, ஒரு நல்ல வேலைக்காரனாக எப்படி வேலை செய்வது என்பது யோகிகளுக்குக்கூட ஒரு புரியாத புதிர்.

மனிதர்களுக்கு மனிதர்களே எஜமானனாக இருந்தால், வேலை செய்வது சங்கடம் தான். எனவே, எல்லாம் வல்ல பகவானையே நமது எஜமானனாகக் கருதி, அவனிடம் சேவை செய்வதாகப் பாவித்தால், இந்தக் கஷ்டம் எதுவுமில்லை, ஏனென்றால், பகவான் நம் உள் மனத்தையும், அதிலுள்ள எண்ணங்களையும் புரிந்து கொள்ளக் கூடியவன்.

நம் செயல்களை மட்டும் பாராமல், நம் மனத்திலுள்ள பாவனையையும், எண்ணத்தில் உள்ள நோக்கங்களையும், சேவை செய்யும் மனப்பான்மையும், பக்திப் பரிமாணத்தையும் கொண்டு நமக்கு அனுக்கிரஹம் செய்யும் எஜமான் பகவான்தான்.

நம்முடைய ஐம்புலன்களின் சக்தி கொண்டு, நம்முடைய எண்ணங்களையும், தேவையான பொருட்களையும் நாம், அவ்வப்போது, உருவாக்குகிறோம். நம்முடைய அறிவாற்றலானது நிஜமாக அல்லது பிரத்யட்சமாக இருக்கும் காரண காரியங்கள் அல்லது வஸ்துக்களை நம்பியிருக்கின்றன. சில சமயங்களில் அது நம்முடைய உலக நம்பிக்கையின், அதாவது அனுமானத்தின் அடிப்படையில் உருவாகிறது. அதுபோல, உலகில் நாம் காணும் ஒவ்வொரு பொருளையும் யாரோ ஒருவன் படைத்திருக்கிறான் என்பதில் சந்தேகமே இல்லை. 'அப்படிப்படைத்தவன் யார்?' என்று தெரியாவிட்டாலும், 'அப்படி ஒருவன் இருக்கின்றான்' என்பதை உத்தேசமாக எல்லோரும் நம்புகிறோம்.

அப்படி இருக்கும் பொழுது, பூமி, ஆகாயம், சூரியன், சந்திரன், கிரகங்கள், எண்ணற்ற நட்சத்திரங்கள் கணக்கில் அடங்கா ஜீவராசிகள் போன்றவற்றையெல்லாம் படைத்தவன் ஒருவன், இருக்கத்தானே வேண்டும். அவன்தான் சர்வ வல்லமையுள்ள கடவுள் அந்த ஈஸ்வரனையே நமது எஜமானனாகக் கொண்டு, அவன் கீழ் வேலை செய்வது சர்வசிரேஷ்டமானது. அப்படி நினைக்கும் போது, நமக்கு எஜமானனாக இருக்கும் இவ்வுலக மனிதனும், திருப்தியடைந்து விடுவான்.


# மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.12.1984 ற்கு முன்பு அடகுவைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதிகளில் கீழ் குறிப்பிட்ட கிளைகளில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| | கிளை | ஏலம் விடப்படும் திகதி | இடம் |
|---|---|---|---|
| 01 | புங்குடுதீவு (இப்பொழுது யாழ். பிரதான வீதிக்கிளையுடன் இணைக்கப் பட்டுள்ளது) | 07.08.2004<br>08.08.2004<br>09.08.2004 | யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கி |
| 02 | காங்கேசன்துறை (இப்பொழுது யாழ். நவீன சந்தையில் உள்ளது- ஆஸ்பத்திரி வீதி) | 14.08.2004<br>15.08.2004<br>16.08.2004 | " |
| 03 | பளை (இப்பொழுது சாவகச்சேரிக்கிளையுடன் இணைகப்பட்டுள்ளது) | 21.08.2004<br>22.08.2004<br>23.08.2004 | " |
| 04 | ஊர்காவற்றுறை | 11.09.2004ல் இருந்து 14.09.2004வரை | " |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப்போடும் உரிமை வங்கிக்கு உள்ளது.

மக்கள் வங்கி,
பிரதேச காரியாலயம்
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

பிரதேச முகாமையாளர்
யாழ்ப்பாணம்.

(C/383)


# இடைக்கால நிர்வாகம் பற்றிப் பேசலாம்

# ஜனாதிபதியின் அண்மைய அறிவிப்புக்கு தமிழ் அரசியல் கட்சிகள் வரவேற்பு

(கொழும்பு)

ஐக்கிய இலங்கைக்குள் இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்திக் கொள்வது தொடர்பான யோசனையின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்த ஜனாதிபதி விருப்பம் தெரிவித்துள்ளமைக்கு வடக்கில் உள்ள அரசியல் கட்சிகள் பாராட்டுத் தெரிவித்துள்ளன.

இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலமான தீர்வைக் காணவேண்டியதன் முக்கியத்துவத்தையும், வடக்குக் கிழக்கு மாகாணத்துக்கான இடைக்கால நிர்வாக சபையை வழங்க வேண்டியதன் அவசியத்தையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.

சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படும் போது தமிழீழ விடுதலைப்புலிகள் கோரும் இடைக்கால நிர்வாக சபை குறித்த யோசனைகள் பற்றிப் பேசுவதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவிக்க வேண்டும் எனவும் அவர்கள் கேட்டுள்ளனர்.

புளொட் அமைப்பின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில்,

அரசாங்கம் சமாதானப்பேச்சுவார்த்தைகளை உடன் ஆரம்பிக்க வேண்டும். அரசின் சமாதான நடவடிக்கைகளுக்கு எமது கட்சி பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கும் என்றார்.

இதேவேளை, அரசின் சமாதான நடவடிக்கைகளுக்கு ஈ.பி.டி.பியும் பூரண ஆதரவை வழங்குமென கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவும் தெரிவித்துள்ளார்.(உ-60,10)

## ஆன்மீக நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பகவான் ஸ்ரீசத்தியசாயி சேவா நிலையத்தில் போயா ஆன்மீக நிகழ்ச்சிகள் நாளை சனிக்கிழமை அதிகாலை 5 மணி முதல் இடம்பெறவுள்ளன.

நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வு நண்பகல நாராயணசேவையுடன் நிறைவு பெறவுள்ளது. (உ)

# வேலைவாய்ப்புக் குறித்து பட்டதாரிகள் சர்ச்சை

(கொழும்பு)

தொழில் வாய்ப்பைப் பெறுவதற்கு 56 ஆயிரம் பட்டதாரிகள் விண்ணப்பித்திருந்த நிலையில் அவர்களில் 15 ஆயிரம் பேருக்கு மாத்திரம் அரசு எந்த அடிப்படையில் வேலைவாய்ப்பை வழங்குகின்றது என்று ஒருங்கிணைக்கப் பட்ட பட்டதாரிகள் சங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.

அந்தச் சங்கம் இது பற்றி மேலும் தெரிவிக்கையில்,

கிடைக்கப்பெற்ற பெருமளவான விண்ணப்பங்களில் தொழில் எதுவும் புரியாமல் உள்ளவர்களைத் தெரிவு செய்வதற்கு அரசாங்கம் ஒரு பரிசீலனை முடிவைக் கடைப்பிடிப்பதில் தவறில்லை.

ஆனால், அவ்வாறான பரிசீலனை முறை பூர்த்தியடைவதற்கு முன்னர் எந்த அடிப்படையில் 15 ஆயிரம் பேர் தெரிவு செய்யப்பட்டனர் என்பது எமக்குப் புரியவில்லை.

எனவே, இவ்விடயம் குறித்தும் அது சம்பந்தப்பட்ட பல விடயங்கள் குறித்தும் அரசாங்கம் தெளிவுபடுத்தவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-8)

# பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்பில் பல்வேறு சிக்கல்கள்-ஐ.தே.க. கண்டனம்

(கொழும்பு)

தேர்தலுக்கு முன்னர் அரசாங்கம் வேலையற்ற பட்டதாரிகள் 21 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதாக கூறியது. தற்போது அந்த எண்ணிக்கையை 15 ஆயிரமாகக் குறைக்கப்பட்டமை குறித்து ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அகில விராஜ்காரியவசம் குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இவ்வாறு குற்றம் சாட்டினார்.

அரச சேவை ஆணைக்குழு நிரந்தர நியமனங்களை வழங்க முடியாது என்று அரசாங்கத்திற்கு எழுத்து மூலம் அறிவித்துள்ள நிலையில் பட்டதாரிகளை அரசாங்கம பயிற்சியாளராக இணைத்துக கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது.

பயிற்சிகளை வழங்கி வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்குமாயின், வெற்றிடங்கள் நிலவ வேண்டும். எனினும் அரசு அதனைப் பின்பற்றாது திறைசேரியினால் நிறைவேற்ற முடியாத வேலை வாய்ப்புக்கு அரசு அறிவித்துள்ளது என்று குறிப்பிட்டார்.

இங்கு கருத்து வெளியிட்ட தென் மாகாண சபை உறுப்பினர் பத்திரன,

பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறியவர்களுக்கு இரண்டு ஆண்டுகள் பயிற்சி வழங்கவேண்டிய அவசியம் இல்லை. தொழில் துறைக்கான பயிற்சியினை வழங்குவதாயின், வேலை வாய்ப்புக்கான நியமனக் கடிதங்ளை வழங்கி, அரச சேவை ஆணைக்குழு ஊடாக நிரந்தர நியமனக் கடிதங்களை வழங்கிய பின்னர் தகுதிகான் காலத்துக்கு பயிற்சியினை வழங்கவேண்டும்.

ஆனால், இவ்வாறான பயிற்சி வழங்குவது அவசியம் இல்லை. அவ்வாறு பயிற்சி வழங்கவேண்டுமாயின் பல்கலைக்கழகங்களில் பாடவிதானங்களை மாற்றியமைக்க வேண்டும் என்று தெரிவித்தார்.(உ-8)

# ஆஸ்பத்திரி ஊழியரின் வேலைநிறுத்தம் முடிவு

(கொழும்பு)

மாகாண சபைகளின் கீழ் இயங்கிவரும் வைத்தியசாலைகளில் பணிபுரியும் ஊழியர்களால் நடாத்தப்பட்டுவந்த அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் நேற்று முன்தினம் முடிவுக்கு வந்துள்ளது.

சம்பள முரண்பாடுகளை நீக்குமாறு கோரி மேற்படி வைத்தியசாலை ஊழியர்கள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தை நடாத்திவந்தனர். இந் நிலையில், இவர்களின் கோரிக்கைக்குச் சாதகமான பதில் கிடைக்கப்பெற்றதையடுத்தே, இவ் அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளதாக சுகாதார சேவை தொழிற்சங்க சம்மேளனத்தின் இணை அமைப்பாளர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

இதேவேளை, வடமேல், சப்பிரகமுவ, வட-கிழக்கு மாகாண சபைகளினால் நிர்வகிக்கப்படும் வைத்தியசாலைகளின் ஊழியர் பிரச்சினைகளுக்கு இதுவரை எதுவித தீர்வும் காணப்படாமை குறிப்பிடத்தக்கது.

(உ-18,61)

# நாணயத் தாள்களை வைத்திருந்த நபர் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுமார் 50 இலட்சம் ரூபா பெறுமதியான பல்வேறு நாட்டு நாணயத்தாள்களை வைத்திருந்த நபர் ஒருவர் விமானநிலையப் பொலிஸாரினால கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து சுமார் 50 இலட்சம் பெறுமதியுடைய யூரோ, அமெரிக்க டொலர், ஜென், சுவிஸ் பிராங், மாலைதீவு ரூபாய் மற்றும் இலங்கை ரூபாய் போன்ற நாணயத் தாள்களை கட்டுநாயக்க சுங்கப்பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

மிகவும் நுட்பமான முறையில் இந்தப் பணங்களைக் கடத்த முயன்ற வேளையிலேயே சந்தேகத்திற்கிடமான மேற்படி நபர் கைது செய்யப்பட்டதுடன், இது விடயம் தொடர்பாக அந்நபரிடமிருந்து தகவல்களைப் பெறும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது. (உ-18,61)

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவர்க்கு
எழுமையும் ஏமாப்புடைத்து - குறள்

வலம்புரி

## மாணவர்களின் கல்வியை பாதிக்கும் செயல்

பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் நடவடிக்கையில் புதிய அரசு ஈடுபட்டுள்ளது. பட்டப்படிப்பை நிறைவுசெய்துவிட்டு வேலைவாய்ப்புக்காக பல வருடங்கள் காத்திருந்த பட்டதாரிகளுக்கு அரசு நியமனங்களை வழங்குவது மனத்திற்கு திருப்தி தருவதாக உள்ளது.

எனினும், நியமனங்கள் முழுமை பெறாமையினால் பட்டதாரிகளிடையே குழப்பத்தையும் மனக்கிலேசத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இதனை நிவர்த்தி செய்வது அரசின் கடமையாகும்.

பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு பெருமளவு நிதியைச் செலவு செய்யும் அரசு, பட்டதாரிகளுக்கு உடனடியாக வேலை வாய்பை வழங்காது காலம் கடத்துவதால் பெறுமதிவாய்ந்த மனித மூலதனம் வீணடிக்கப்படுகிறது.

மனித மூலதனத்தின் "பயன்படுத்துகை" என்பது இன்றைய உலக மயமாக்கலில் மிகவும் முக்கியமான விடயமாகும். உலகின் அபிவிருத்தியடைந்த நாடுகளை எடுத்து நோக்கின் அந் நாடுகள் மனித மூலதனத்தை தக்கமுறையில் பயன்படுத்திக் கொள்வதை காணமுடியும். மனித மூலதனத்தை எந்தவொரு நாடு உரிய முறையில் பயன்படுத்துகிறதோ அந்த நாடே பேரளவு உற்பத்தி, வறுமை ஒழிப்பு, நியாயத்துவப் பொருளாதாரம், பௌதிக வாழ்க்கை பண்புச் சுட்டெண்ணின் திருப்தி என்ற வகையில் உயர்வு கண்டுள்ளது.

மாறாக மனித மூலதனத்தை வீணடிக்கின்ற இலங்கை போன்ற நாடுகளில் வறுமை, பொருளாதார வளர்ச்சியின்மை போன்ற கீழ் நிலையுடன் வன்முறைகளும் தாண்டவமாடுகின்றன.

இவ்வாறு பட்டப்படிப்புக்காக - உயர் கல்விக்காக பெருமளவு நிதியை செலவிட்டு மக்களின் கல்வி அறிவு வீதத்தை உயர்த்திக் கொண்டிருக்கும் அரசு, உயர் படிப்பை மேற்கொண்ட இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்குவதில் உரிய திட்டங்களை வகுத்து அதனை நடைமுறைப்படுத்துவதில் தவறிழைத்து விடுகிறது.

அதிலும் படிப்பிற்கேற்ற நியமனங்களை வழங்காமல் ஏதோ "வெற்றிடம் நிரப்பும் பணி" என்பது போல் வெவ்வேறு துறைசார் பட்டதாரிகளுக்கு பொருத்தமற்ற நியமனங்கள் வழங்கப்படுகின்றன. இவ்வாறு பொருத்தமற்ற நியமனங்களை வழங்குவதன் மூலம் அவர்கள் தமது முழு வினைத் திறனையும் வெளிப்படுத்த முடியாமல் திண்டாடுவதுடன் தொழிலில் வெறுப்புக்கும் ஆளாகின்றனர். இவை இன்று நேற்றல்ல. நீண்டகாலமாக நடைபெற்றுவரும் நிகழ்வாக உள்ளது.

இதனை நிவர்த்தி செய்து படிப்புக்கேற்ற - பொருத்தமான நியமனங்கள்ள வழங்கி மனித மூலதனத்தின் உச்ச பயன்பாட்டை பெறும் திட்டங்கள் அரசினால் வகுக்கப்படவேண்டும். அப்போது தான் நாட்டின் பொருளாதார வளர்ச்சி என்பது உயர்வு காணமுடியும்.

இதற்கு மேலாக அரசின் பட்டதாரிகளுக்கான நியமனத்தில் உயர் தேசிய கல்வி நிறுவனங்களில் கற்று உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (எச். என்.டி.ஏ) உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா (என்.என்.டி.எம்) பெற்ற பட்டதாரிகள், பட்டதாரிகளுக்கான நியமனத்தில் ஓரம் கட்டப்பட்டுள்ளனர்.

உயர் தேசிய டிப்ளோமாக்கள் பல்கலைக்கழக பட்டங்களுக்கு ஒப்பானவை என 5-14-97 என்ற இலக்க சுற்றுநிருபத்தின் மூலம் அறிவித்த அரசு இப்போது டிப்ளோமா பட்டதாரிகளை ஒதுக்கிவிடுவதானது சுற்றுநிருபத்தை மீறும் நடவடிக்கை மட்டுமன்றி மேற்போன்ற கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கின்ற மாணவர்களையும் வெறுப்படையச் செய்யும்.

எனவே, அரசு பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும்போது உயர் தேசிய டிப்ளோமாப் பட்டதாரிகளையும் கருத்தில் கொண்டு செயற்படுவது அவசியமாகும்.

இல்லையேல் தேவையற்ற சிக்கல்கள், போராட்டங்கள் நடைபெறுவது தவிர்க்கமுடியாததாகி விடும்.

# சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க அரசாங்கம் தயாராகவே உள்ளது

## ஊடகத்துறை அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதானப் பேச்சுகளை மீளவும் ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் தயாராகவே உள்ளதாக ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை வெளியிடும்ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இக்கருத்தினைத் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கில் இடம்பெறும் கொலைகளை நிறுத்தத் தமிழீழ விடுதலைப்புலிகள் உடனடி நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமும் இறுக்கமான கொள்கைகளைக் கைவிட்டு நெகிழ்வுப் போக்கினைக் கடைப்பிடிப்பதன் மூலமே சமாதான முன்னெடுப்புகள் சாத்தியப்படும்.

சமாதானப் பேச்சுக்களை மீளவும் ஆரம்பிக்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது. இதனால் எப்பொழுதும் சமாதானப் பேச்சுக்களை தொடங்க அரசு தயாராகவே உள்ளது.

எனவே, இதனை உணர்ந்து புலிகளும் செயற்படுவதே சாத்தியப்பாடான சமாதானப்பேச்சுக்களை தொடர வழி செய்யும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-4,64)

## ஊழல் மோசடியுடன் தொடர்புடைய 3 திணைக்களங்கள் இனங்காணுகை

(கொழும்பு)

இலங்கையில் மிக அதிக அளவில் ஊழல் மோசடிகள் புரிநத 3 திணைக்களங்கள் அடையாளங்காணப்பட்டிருக்கின்றன.

ஆட்பதிவுத் திணைக்களம், குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் மற்றும் வாகனப்பதிவாளர் திணைக்களம் ஆகியவற்றிலேயே அதிகளவு மேசாடிகள் இடம்பெற்றுள்ளதாக லஞ்ச ஊழல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதனால் மேற்படி மூன்று திணைக்களங்களினதும் தலைவர்களை கைது செய்து தாம் விசாரணை செய்வதுடன் அவர்களை தற்காலிகமாக பணி நீக்கம் செய்யவும் நடவடிக்கை எடுத்துள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஆட்பதிவுத்திணைக்களம்,குடியவரவு குடியகல்வு திணைக்களம், வாகனப் பதிவாளர் திணைக்களம் ஆகிய மூன்று திணைக்களஙகளும் சட்டம் ஒழுங்கு பேணும் அமைச்சின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் கொண்டு வரப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-10)

## கூரைத்தகடு மோசடியை கண்டறிய குழு

(கொழும்பு)

இடம்பெயர்ந்த மக்களுக்காக விநியோகிக்கப்பட்ட கூரைத் தகடுகளை இறக்குமதி செய்ததில் இடம்பெற்ற ஊழல்கள் தொடர்பாக விசாரணைகளை நடத்துவதற்கு ஜனாதிபதி ஆணைக்குழுவால் விசாரணைக்குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளது.

கடந்த அரசாங்கத்தினது காலத்தில் இடம்பெற்ற இம் மோசடிகள் குறித்து விசாரணைகளை நடத்தி சம்பந்தப்பட்டவர்களை இனம் கண்டு பரிகாரம் தேடுவது சம்பந்தமான நடவடிக்கைகளை இக்குழு மேற்கொள்ளும். (உ-43)

## சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் அடுத்தவாரம் ஆரம்பிக்கும் சாத்தியம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் அடுத்த மாத முற்பகுதியில் தாய்லாந்தில் இடம்பெறலாம் எனத் தெரியவந்துள்ளது.

தற்போது தாய்லாந்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தாய்லாந்தில் இதுகுறித்து ஆராய்ந்துள்ளதாக தகவல்கள் தொிவிக்கின்றன.

நேறறு முன்தினம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இடைக்கால நிர்வாகம் தொடர்பில பேசத் தயாராக இருப்பதாக அறிவித்துள்ள நிலையில் விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு இந்தவார இறுதியில் வெளியிடப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இன்று விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெலக்சீன் பேச்சு நடத்தவுள்ளார். இன்று இடம்பெறவுள்ள இந்த சந்திப்பில் விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு குறித்து உத்தியோகபூர்வ அறிவித்தல் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதேவேளை, பேச்சுக்களை ஆரமபிக்கும் முகமாகவே விடுதலைப்புலிகளால் வெளியேற்றப்பட்ட கருணா நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டதாகத் தெரியவந்துள்ளது. (உ-121)

### திசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

ஒவ்வோர் உயிரிலும் தெய்வீகத் தன்மை மறைந்திருக்கிறது. உள்ளேயும் வெளியேயும் இருக்கும் இயற்கையைக் கட்டுப்படுத்தி உள்ளே குடிகொண்டுள்ள இந்தத் தெய்வீகத் தன்மையை மலரும்படி செய்வது தான் முடிவான இலட்சியமாகும்.

சுவாமி விவேகானந்தர்

## ஆடிப் பூரணை விழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரம சங்கத்தின் ஆடிப்பூரணை விழாவும் இலவச மருத்துவ முகாமும் நாளை சனிக்கிழமை மதியம் 12.00 மணிக்கு யா/ சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் த. தர்மசோதி தலைமையில் இடம்பெறும். ஆடிப் பூரணை நிகழ்வில் சிறப்பு ஆன்மீக உரையினை 'சுவாமி விவேகானந்தரின் கல்விச் சிந்தனைகள்' என்ற பொருளில் ஆர். ராஜாமகேந்திரசிங்கம் நிகழ்த்தவுள்ளார்.

முன்னதாக காலை 9.00 மணிக்கு இலவச மருத்துவ முகாம் இடம்பெறவுள்ளது. (உ)

## காவலூரில் வீதிகள் திருத்தம்


(ஊர்காவற்றுறை)

உலக உணவுத் திட்டத்தின் கீழ் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் 4 வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

இந்த வகையில் நாரந்தனை வடக்கு, மயானவீதி, நாரந்தனை தெற்கு சூரியாவத்தை வீதி, புளியங்கூடல் அம்மன் கோயிலடி வீதி, புளியங்கூடல் சுருவில் மயான வீதி என்பனவே புனரமைக்கப்படவுள்ளது.

உணவுக்காக வேலை என்ற அடிப்படையில் மக்கள் மூலம் மேற்படி வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

இவ்வீதிகள் புனரமைக்கும் பணி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது. (உ-75)





நல்லூர் ப.நோ. கூ. சங்க கிராமிய வங்கி மூலம் கடன் பெற்று ஒழுங்காக திருப்பிச் செலுத்திய சங்க உறுப்பினர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. நல்லூர் ப.நோ.கூ. சங்கத் தலைவர் கனகசபாபதி தலைமையுரையாற்றுவதையும் ,யு. என். டி.பி. இணைப்பாளர் திருமதி ஞானம்பிகை சிவபாதசுந்தரம் பரிசில்கள் வழங்குவதையும் படத்தில் காணலாம்.

## விஞ்ஞான தினவிழா

(தனங்கிளப்பு)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் விஞ்ஞான தினவிழா இன்று காலை 9 மணிக்கு விஞ்ஞானமன்றத் தலைவர் சி.மயூரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட வாழ்நாள் பேராசிரியர் க.பாலசுப்பிரமணியமும், சிறப்பு விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவியும் மருத்துவபீட மாணவியுமான த.கிருசாந்தியும் கலந்துகொள்ளவுள்ளனர். (உ-37)

## தமிழ்மொழித் தினவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தீஸ்வர கல்லூரியின் தமிழ்ப் பேரவை நடத்தும் தமிழ்மொழித்தின விழா இன்று காலை 9.30 மணிக்கு கல்லூரி விவேகானந்தா மண்டபத்தில் ச.கலைபாகர் தலைமையில் இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசனும், சிறப்பு விருந்தினராக அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## காணாமல்போனோர் தொடர்பாக

# சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனு விசாரணை

1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கைதடி நாவற்குழிப்பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்ட காணாமற்போனோர் தொடர்பாக ஆறு ஆட்கொணர்வு மனுக்கள் மீதான வழக்கு, நேற்றையதினம் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி எஸ். பாலசுப்பிரமணியம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மேற்படி ஆறு ஆட்கொணர்வு மனுக்கள் குறித்த முக்கிய எதிரியான 1996 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கைதடி இராணுவ முகாம் பொறுப்பதிகாரியாக இருந்த குமிந்த கெப்பற்றிக்கலாவ நேற்றைய தினம் நீதிமன்றில் ஆஜராகாததையடுத்து வழக்கு விசாரணையை எதிர்வரும் செம்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இதேவேளை, கடந்த 96 ஆம் ஆண்டு யூலை 19 ஆம் திகதி நாவற்குழிப் பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோர் தொடர்பான மேலும் 10 ஆட்கொணர்வு மனுக்கள் மீதான வழக்கு விசாரணை அடுத்த மாதம் 21 ஆம் திகதி சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-43)

### மாவீரர்களின்...

எழுவோம்' நாட்டிய நாடகம் உள்ளிட்ட நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்நிகழ்வில் சோதியா படையணியின் 7 ஆம் ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற போராளிகளுக்கான பரிசில்களை சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணித் தளபதி லெப்.கேணல் நகுலன், மற்றும் தினேஸ் ஆசிரியர் உள்ளிட்ட பொறுப்பாளர்கள் வழங்கிக் கௌரவித்தனர்.

இந்நிகழ்வில் தளபதிகள், துறைசார் பொறுப்பாளர்கள், போராளிகள் உள்ளிட்ட பெருமளவானோர் உணர்வுபூர்வமாக் கலந்து கொண்டிருந்தனர். (ம-121)

### சமாதானப்...

யைக் கொண்டுள்ளது.

எனினும், டக்ளஸ் தேவானந்த தனது கட்சியைச் சேர்ந்தவரல்ல என்று ஜனாதிபதி கூறியுள்ளதை கண்டித்துள்ள ஜீ.எல்.பீரிஸ, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் பொறுப்புள்ள அமைச்சர் என்ற வகையில் அவரின் கருத்து ஜனாதிபதியின் கருததுக்கு எதிராகவே அமைந்துள்ளதாக தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக ஜனாதிபதி மேற்கொள்ளும் அனுகூலமான நிகழ்வுகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி தனது ஆதரவை வழங்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-121)

### மாவீரர்களின் தியாக..

முன்னதாக பொதுச்சுடரினை கல்விக்கழகப் பொறுப்பாளர் விமல்ராஜ் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியினை தளபதி பிரபா ஏற்றினார். கப்டன் அன்பரசியின் திருவுருவப்படத்திற்கு அவரது தாயார் மலர்மாலை அணிவித்தார்.

முட்டக்களப்பு அம்பாறை மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் குவேனி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழ்த் தேசிய பாராளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன், பிரதேச செயலர் அமலநாதன் உட்பட போராளிகள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டிருந்தனர். (ம-121)

## பிரதேச செயலாளர்களுக்கு கொழும்பில் இன்று கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையிலுள்ள அனைத்து பிரதேச செயலர்களுக்குமான கூடடம் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரின் தலைமையில் கொழும்பில் இன்று நடைபெறவுள்ளது.

இவ் விசேட கூட்டத்தில் யாழ். மாவட்டத்தில் உள்ள 18 பிரதேச செயலகங்களின் பிரதேச செயலர்களும், யாழ். மாவட்ட மேலதிக அரச்சாங்க அதிபர் சிவசுவாமியும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-19,05)

## கூட்டம் நடைபெறாது

(யாழ்ப்பாணம்)

இன்று நடைபெறவிருந்த யு.என்.எச்.சி.ஆரின் மாதாந்த நூலாய்வுக் கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும். (உ-19,05)

## கூட்டம்

(கோப்பாய்)

கோப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டமும், பிரதேச விவசாயக்குழுக் கூட்டமும் இன்று கோப்பாய் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (உ-79)


## பிறீடம் பாவனையாளர் கவனத்திற்கு

கொழும்பில் இருந்து தொழில்நுட்ப வல்லுனர்கள் யாழ்ப்பாணத்தில் 31 ஆம் திகதி சனிக்கிழமை அன்று **பிறீடம் பாவனையாளர்களைச்** சந்திக்க விரும்புகிறார்கள்.

தங்கள் பிறீடம் மோட்டார் சைக்கிள் பற்றி சந்தேகங்கள் குறைபாடுகள் இருப்பின் கலந்துரையாடி தீர்வு காணலாம்.

இடம்: இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்
50, 52,54 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்
தொலைபேசி 2223096

அதிசிறந்த உன்னத பாவனைக்கு பிறீடம் மோட்டார் சைக்கிளை நாடுங்கள். (C/382)

யாழ்ப்பாணத்தில்
**இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்**
50,52,54 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி இல. 222 2988, 222 3096
தொலைநகல் : 222 2368


### ஜனாதிபதி புலிகளுடன்...

கூற்றை பொருட்படுத்தாது. ஜனாதிபதி சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்த நாம் அனைவரும் இதய சுத்தியுடனும், தெளிவுடனும் நிபந்தனைகள் எதுவுமின்றி ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குவோம். சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அரசியல் பேதங்கள் ஒரு போதும் முட்டுக்கட்டையாக இருககமாட்டாது.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்து இந்த நாட்டை மீண்டும் ஒரு யுத்தத்திற்கு இட்டுச் செல்வதற்கான எந்த ஒரு அரசியல் நடவடிக்கைக்கும் நாம் உடன்படமாட்டோம்.

எனவே, ஜனாதிபதி சந்திரிகா சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வாரேயானால் அவருக்கு பாராளுமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் ஐக்கிய தேசியக் கட்சி முழுமையான ஆதரவினை வழங்கும். இதனை உறுதிசெய்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி எப்பொழுதும் தயாராகவே உள்ளது என்றும் ராஜித சேனா ரத்ன தெரிவித்துள்ளார். (ம)


## வீட்டு வகுப்பு

O/L 2004, தரம் 10, 9, 8, 7
வகுப்புக்களுக்குரியது

**கணிதம் சங்கர்**

உங்கள் வீடுகளுக்கு வந்து கணிதம் A சித்தி பெற கற்பிக்கப்படும்.

11/2 மணித்தியாலய ஒரு வகுப்புக்குரிய
கட்டணம் -100 ரூபா மட்டுமே!

தொடர்பு :- DIRECTOR
New Science Hall
Kannathidy Road, Jaffna
T.P:- 0777-917611
(C/378)


### நெடுந்தீவில்...

னர் எவரும் நிலைகொண்டிருக்கவில்லை. இப்போது நெடுந்தீவு அஞ்சலக வளாகத்தில் புதிதாக முகாம் அமைக்க ஸ்ரீலங்காக் கடற்படையினர் துப்புரவுப்பணியை மேற்கொண்டுள்ளனர். இந்த முகாம் அமைக்கும் நடவடிக்கையை எதிர்த்து இதனை நிறுத்துமாறு போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவுக்கு மக்கள் புகாரிட்டிருந்தனர்.

இதனையடுத்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் நேற்று நெடுந்தீவுக்குச் சென்று கடற்படை முகாம் அமைக்கும் நடவடிக்கையை நேரில் பார்த்தனர். முகாம் அமைப்பதை நிறுத்தக் கோரி நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் சார்பில் அதன் செயலாளர் அமிர்தலிங்கம் கண்காணிப்புக் குழுவிடம் மனு ஒன்றை நேற்றுக் கையளித்துள்ளார். (ம-121)


ஹனல் வங்கி

க.பொ.த (உ/த)ப் புதிய பாடத்திட்டத்திற்கான



கணக்கீட்டு நூல்
"நிதிக் கணக்கீட்டின் வினா வங்கி"

ஹட்டன் நஷனல் வங்கி - சுன்னாகம்

HATTON NATIONAL BANK LIMITED

முதலாம் ஆண்டு நிறைவு

## மாபெரும் மரதன்/சைக்கிள் ஓட்டப் போட்டிகள்

HNB சுன்னாகக் கிளையின் முதலாம் ஆண்டு நிறைவினை முன்னிட்டு பாடசாலை மட்டத்திலான மாபெரும் சைக்கிள், மரதன் ஓட்டப் போட்டிகள்

காலம்: 31.07.2004 (சனிக்கிழமை)
நேரம்: காலை 6.00 மணி
ஆரம்பிக்கும் இடம்: HNB சுன்னாகக் கிளை முன்பாக

அனைத்து வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் வந்து நிகழ்வை சிறப்பித்து மாணவர்களை உற்சாகமூட்டுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஹட்டன் நஷனல் வங்கி
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

முகாமையாளர்
ஊழியர்கள்

(C/384)



வினா வங்கி"

ஆசிரியர்: D.Sam

வெளியீடு: DMI யின் சக நிறுவனம் DMP

நூல் பற்றிய குறிப்புக்கள்:

* A/L - 2006 இற்கான புதிய பாடத்திட்டத்தை முழுமையாக உள்ளடக்கியது. (பழைய பாடத்திட்டத்திற்கும் பயன்படுத்தக் கூடியது)
* A/L AAT, BBA, B.com, CIMA, CACA, HNDA, HNDM, IBSL, NDBS, NDBF, NCAT, NCAM போன்ற பரீட்சை களுக்கு உதவக்கூடியது.
* 750 பக்கங்கள்.
* 1192 வினாக்கள்.
* 1974 - 2004 க்குமான A/L பரீட்சை வினாப் பத்திரங்கள். இந்தாண்டுவரை கிடைத்த AAT, BBA, B.com, CIMA, CACA, HNDA, HNDM, IBSL, NDBS, NDBF, NCAT, NCAM பரீட்சை வினாப் பத்திரங்கள்.
* மேலதிகப் பயிற்சிகள் உள்ளடக்கிய CD - Rom
* .............

DMP

கிடைக்கும் இடங்கள்

யாழ்: DMI, பூபாலசிங்கம் புத்தகசாலை, ஸ்ரீலங்கா புத்தகசாலை

கொழும்பு: பூபாலசிங்கம் புத்தகசாலை, ஸ்ரீலங்கா புத்தகசாலை, Jeya Book Centre, PITRABAN

(C/385)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.07.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.